விலை: 30.00
பக்கங்கள் : பதினாறு
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1500/= + 500/= மட்டுமே

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 புரட்டாதி 06 புதன்கிழமை (22.09.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 277

# தமிழ் அரசியல் கைதிகளுக்கு கொலை அச்சுறுத்தல்!

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியால் பாராளுமன்றில் இன்று விசேட பிரேரணை

(கொழும்பு)

அநுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளுக்கு விடுக்கப்பட்டுள்ள கொலை அச்சுறுத்தல் தொடர்பில் இன்று பாராளுமன்றில் விசேட பிரேரணை முன்வைக்கப்படவுள்ளது எனத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (15ஆம் பக்கம் பார்க்க)

## கொரோனா 1,321

(கொழும்பு)

நாட்டில் மேலும் 1,321பேருக்கு கொரோ 15

## மன்னாரில் 104 கிலோ கஞ்சா மீட்பு

(மன்னார்)

மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள இலுப்பைக்கடவை கத்தாளம்பிட்டிப் பகுதியில் 15

## கிளிநொச்சி அக்கராயனில் மின்சாரம் தாக்கியதில் இளம் குடும்பஸ்தர் மரணம்



(கிளிநொச்சி)

கிளிநொச்சி அக்கராயனில் மின்சாரம் தாக்கியதில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் கிளிநொச்சி அக்கராயன் குளம் வைத்தியசாலை வீதிப் பகுதியில் 15

# அரச கூட்டுக்குள் மீண்டும் மோதல்


(கோப்புப் படம்)

## ஜனாதிபதியின் வருகைக்காக பங்காளிகள் காத்திருப்பு

(கொழும்பு)

கெரவலப்பிட்டிய மின் உற்பத்தி நிலைய விவகாரம் தொடர்பில் அரச கூட்டுக்குள் மீண்டும் மோதல் நிலை உருவாகியுள்ளது.

ஜனாதிபதியுடன் இது தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்த அரசின் பங்காளிக் கட்சிகள் காத்திருக்கின்றன. (15ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நா பொதுச்சபையில் ஜனாதிபதி கோட்டாபய இன்று உரையாற்றுவார்



(நியூயோர்க்)

76ஆவது ஐ.நா பொதுச்சபைக் கூட்டத்தொடர் நேற்று அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தலைமையில் ஆரம்பமாகியது.

குறித்த கூட்டத்தொடரில் ஜனாதி 15

## கிளிநொச்சியில் உயிரிழந்த மூவருக்கு கொரோனா

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் உயிரிழந்த மூவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. 15

## சிறைச்சாலைக்குள் தமிழ் அரசியல் கைதிகள் நிர்வாணமாக்கப்பட்டு பாலியல் சித்திரவதை

### பாராளுமன்றில் கஜேந்திரன் எம்.பி



(கொழும்பு)

கொழும்பு விளக்கமறியல் சிறைச்சாலையில் தமிழ் அரசியல் கைதிகள் பாலியல் சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டதாக அதிர்ச்சித் தகவலை வெளியிட்டுள்ளார் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன்.

நேற்று பாராளுமன்றத் 15

## நாட்டில் மேலும் 66 பேர் மரணம்

(கொழும்பு)

நாட்டில்கொரோனாத் தொற்றினால் 15

## பாடசாலைகளை திறப்பதற்கான சுகாதார வழிகாட்டல்கள் கல்வி அமைச்சிடம் கையளிப்பு

(கொழும்பு)

பாடசாலைகளைத் திறப்பது சம்பந்தமான சுகாதார வழிகாட்டல்களை சுகாதார சேவைகள் பணிப்பாளர், கல்வியமைச்சின் செயலாளருக்கு நேற்று வழங்கியுள்ளார்.

இந்த சுகாதார வழிகாட்டல்களுக்கு அமைய பாடசாலைகள் திறக்கப்படும் என கல்வியமைச்சு தெரிவித்துள்ளது. 15

## கரவெட்டியில் கோவிட்டால் ஒருவர் உயிரிழப்பு

(கரணவாய்)

கரவெட்டியில் கொரோனாத் தொற்றுக் காரணமாக ஒருவர் உயிரிழந்துள் 15

## காணாமலாக்கப்பட்டவர்களுக்கு மரணச் சான்றிதழ் வழங்கப்படும்

### ஜனாதிபதி தெரிவித்த கருத்துக்கு உறவுகள் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

காணாமலாக்கப்பட்டவர்களுக்கு மரணச் சான்றிதழ் வழங்கப்படும் என ஐ.நா மன்றில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்த கருத்துக்கு காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகள் கடுமையான கண்டனத்தை வெளியிட்டுள்ளனர். 15

# வவுனியாவில் வீதியால் சென்ற பெண்ணின் சங்கிலி அபகரிப்பு

## பொலிஸார், இளைஞர்கள் இணைந்து சங்கிலி அறுத்தவரை மடக்கி பிடிப்பு

(வவுனியா)

வவுனியாவில் வீதியால் சென்றபெண் ஒருவர் அணிந்திருந்த தங்கச் சங்கிலியை அறுத்துக் கொண்டு மோட்டார் சைக்கிளில் தப்பியோடிய இளைஞன் மடக்கிப் பிடிக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

நேற்று மதியம் இடம்பெற்ற இச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது,

வவுனியா, உக்குளாங்குளம் பகுதியில் கடைக்குச் சென்றுவிட்டு வீதியால் நடந்து சென்ற பெண் ஒருவரை பின் தொடர்ந்து மோட்டார் சைக்கிளில் சென்ற இளைஞன் ஒருவர் அவர் அணிந்திருந்த இரண்டரைப் பவுண் தங்கச் சங்கிலியை இழுத்து அறுதுக்கொண்டு பல்சர் ரக மோட்டார் சைக்கிளில் தப்பியோடிய போது, குறித்த பெண் கூக்குரல் இட்டு கத்தியுள்ளார்.

இதனை அவதானித்த அப்பகுதி இளைஞர்கள் குறித்த இளைஞனை கார் ஒன்றில் விரட்டிச்சென்றதுடன், வவுனியா குற்றத்தடுப்புபிரிவு பொலிஸாருக்கும் தகவல் வழங்கினர்.

திருட்டில் ஈடுபட்ட நபர் வவுனியா, வேப்பங்குளம் சந்தியில் ஏற முற்பட்ட போது அங்கிருந்து வந்த பொலிஸாரும் விரட்டிச் சென்ற இளைஞர்களும் இணைந்து திருட்டில் ஈடுபட்டவரை மடக்கிப் பிடித்து வவுனியா குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

மோட்டார் சைக்கிளை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்துள்ள பொலிஸார், குறித்த நபரிடம் இருந்து அறுத்துச் செல்லப்பட்ட இரண்டரைப் பவுண் சங்கிலியும் மீட்டனர். மேலதிக விசாரணைகளின் பின் கைது செய்யப்பட்ட நபரை நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ம-3,250)

# சாவகச்சேரியில் தடுப்பூசி செலுத்த இளைஞர், யுவதிகள் பின்னடிப்பு

(சாவகச்சேரி)

சாவகச்சேரியில் கொரோனாத் தடுப்பூசி செலுத்த இளைஞர், யுவதிகள் பின்னடிப்பதாகத் தெரிக்கப்படுகின்றது.

20-29 வயதுப் பிரிவினருக்கான கொரோனாத் தடுப்பூசிகள் நேற்று செவ்வாய்க்கிழமை தொடக்கம் செலுத்த சுகாதாரப் பிரிவினரால் அறிவிக்கப்பட்டிருந்த நிலையில் சாவகச்சேரி பொன்விழா மண்டபத்தில் ஒரு சில இளைஞர், யுவதிகளை மாத்திரமே தடுப்பூசி செலுத்தும் நிலையத்தில் அவதானிக்க முடிந்தது.

30 மற்றும் 60 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கான தடுப்பூசி ஏற்றலின்போது பொன்விழா மண்டபத்தில் பெருந்திரளானவர்கள் வரிசையில் காத்திருந்து தடுப்பூசி பெற்றிருந்தனர்.

இருப்பினும் 20-29 வயதுப் பிரிவினருக்கான தடுப்பூசி ஏற்றல் நிகழ்வு நேற்று உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்பட்ட போதிலும் தடுப்பூசி நிலையம் வெறிச்சோடிக் காணப்பட்டது. (ம-3,30)

# கொரோனா தடுப்பூசியை விரைவாக பெற்றுக்கொள்ளுங்கள்

## பிரதி சுகாதார பணிப்பாளர் ஹேமந்த ஹேரத்



(கொழும்பு)

நாட்டு மக்கள் அனைவரும் கொரோனாத் தடுப்பூசியை விரைவாகப் பெற்றுக் கொள்ளுமாறு பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் டாக்டர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.

நேற்று கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

எதிர்காலத்தில் வீடுகளுக்கு அருகில் சென்று தடுப்பூசி போடுவதற்குப் பதிலாக ஒரு சில முக்கிய மையங்களில் மட்டுமே தடுப்பூசி போடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவிருப்பதாக அவர் சுட்டிக்காட்டினார்.

நாட்டில் தடுப்பூசி போடத் தொடங்கப்பட்டு ஒரு வருடம் ஆகிவிட்டது. "பூஸ்டர்" தடுப்பூசி செலுத்தியோருக்கு தடுப்பூசியை கொடுக்க வேண்டியிருந்தால் எதிர்காலத்தில் இந்த நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

எதிர்காலத்தில் நாம் இப்போது வீட்டிற்கு அருகிலுள்ள மையத்தை நெருங்குவதற்குப் பதிலாக ஒரு சில முக்கிய மையங்களில் மட்டுமே தடுப்பூசி போட முடியும். அதற்கு எவ்வளவு நேரத்தையும் முயற்சியையும் செலவழிக்க முடியும் என்று சொல்ல முடியாது என்றார். (ம-3)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532



உ
சிவமயம்

வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோவில்

வல்லிபுர மாயவன் அடியவர்களுக்கு அன்பான வேண்டுகோள்!

நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனாத் தொற்றுக் காரணமாக அதன் பாதிப்பினைக் கருத்திற்கொண்டு எமது ஆலயத்தின் வருடாந்த மகோற்சவமானது அடியவர்களின் நலனைக் கருதியும் தடங்கலின்றி நடைபெற வேண்டும் என்ற காரணத்தினாலும் பிற்போடப்பட்டமை தாங்கள் அனைவரும் அறிந்ததே.

இந் நிலையில் ஆலயப் பகுதியில் வதியும் 12 முதியவர்கள் உணவின்றி கஷ்டப்படுவதாக முகப்புத்தகப் பதிவின் மூலம் அடியவர் ஒருவரால் வெளிவரக்காணப்பட்ட நிலையில் தற்போது அவர்களுக்கு பலராலும் உலர் உணவுப் பொருட்கள், சமைத்த உணவுகள், ஏனைய அத்தியாவசிய பொருட்கள், பணம் என்பன வழங்கப்பட்டு வருகின்றன. அதனை வழங்குபவர்கள் அவை அந்த முதியவர்களுக்கு கிடைக்கின்றதா என்பதை உறுதிப்படுத்திக்கொள்ளுமாறு அன்பாகக் கேட்டுக்கொள்கின்றோம்.

மேலும், ஆலய வீதியில் அமைந்துள்ள மடங்களில் தற்போதைய சூழலில் அன்னதானம் வழங்குவதற்கு சுகாதாரப் பிரிவினரால் அனுமதி வழங்கப்படவில்லை என்பதை அறியத்தருகின்றோம்.

இக் காலப் பகுதியில் அன்னதானத்திற்காகவோ அல்லது ஆலயப் பகுதியில் வதியும் முதியவர்களுக்கு உணவு வழங்குவதற்கென்றோ நிதி சேகரிக்க எதுவித அனுமதியும் தர்மகர்த்தா சபையினரால் எவருக்கும் வழங்கபபடவில்லை என்பதை அடியவர்களாகிய உங்களுக்கு அறியத்தருவதுடன் தாங்கள் முதியவர்களுக்கு உதவி செய்ய விரும்பின் நேரடியாக செய்யுமாறு அன்பாகக் கேட்டுக் கொள்கின்றோம்.

முகாமை அறங்காவலர்
வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோவில்



5ஆம் ஆண்டு நினைவலைகள்





அன்னை மடியில் 16.06.1982
ஆண்டவன் திருவடியில் 22.09.2016

ஜெயபாலன் சதீஸ்குமார்

கண்முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எம் முன்னே உன் முகம்
எந்நாளும் உயிர்வாழும்
மண் விட்டு மறைந்த நீ
விண்ணோக்கிச் சென்றாலும்
கண்விட்டு மறையாமல்
எம் நெஞ்சமதில்
எப்பொழுதும்
இருக்கிறாயடா இம்ரா...

"கனகபவன்"
இணுவில் கிழக்கு,
இணுவில்.

ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும்
அப்பா, அம்மா, தங்கை, மைத்துனன்



REMEMBRANCES

Late Mr. S. Subramaniam

(Retd. Supdt. of Surveys)



Our Survey Institute of Sri Lanka

Expresses its Heartfelt condolences on the Demise of Mr. S. Subramaniam [Retired Supdt. of Surveys. Registered licensed surveyor. Former President licensed surveyors Association (N.D)], who passed away on 10.09.2021.

His death is an irre parable loss to our survey profession. His Services are immeasurable and unforgettable. His undaunting and unstinted service deserves immortal praise and admiration.

We express our sincere belated sympathies to his beloved wife, children and grand children.

We all pray for his soul rest in everlasting peace.

May almighty bless Him.

K.T. Sriskandasingam - Vice president SISL.
A. Easwarathevan, V. A. Thankamayl - Members of SISL on behalf of president, Councilors and members of SISL.

# கொரோனாவால் உயிரிழப்போர் வடக்கில் அதிகம்

(குப்பிழான்)

**ஏனைய மாகாணங்களுடன் ஒப்பிடுகையில் வடக்கு மாகாணத்தில் கொரோனாத் தொற்றால் உயிரிழப்போரின் எண்ணிக்கை அதிகமாகக் காணப்படுவதாக வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆறுமுகம் கேதீஸ்வரன் தெரிவித்தார்.**



நாட்டில் கொரோனாத் தொற்றால் உயிரிழப்பவர்களின் எண்ணிக்கை 2.4 வீதம் எனவும், இதில், வடக்கு மாகாணத்தில்1.95 வீதம் எனவும் அவர் தெரிவித்தார்.

சுகாதார நடவடிக்கைகளை மக்கள் பின்பற்றாமையே இவ்வாறான பாதிப்புக்களுக்கு காரணம் எனவும் அவர் மேலும் சுட்டிக் காட்டியுள்ளார். (நி-5-18)

# பல்கலைக்கழக நுழைவுக்கான வெட்டுப்புள்ளி வெளியானது

(கொழும்பு)

புதிய மற்றும் பழைய பாடத்திட்டத்தின் கீழ் 2020 உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளை அடிப்படையாகக் கொண்டு பல்கலைக்கழக நுழைவுக்கான மாவட்ட ரீதியான வெட்டுப்புள்ளி விபரம் வெளிடப்பட்டுள்ளது.

அத்துடன், பல்கலைக்கழக Z -Score அடுத்த மாதம் வெளியாகும் என பல்கலைக்கழக ஆணைக்குழு தலைவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான மேலதிக விபரங்களை https://ugc.ac.lk/ என்ற இணையத்தளத்துக்கு பிரவேசிப்பதன் மூலம் அறிந்துகொள்ள முடியும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (நி-5)

# வடக்கில் தபால் அலுவலகங்கள் இன்மை; விரைவில் தீர்வு காணப்படும் என்கிறார் டலஸ்

(கொழும்பு)



வடக்கு மாகாணத்தில் நிலவும் தபால் மற்றும் உப தபால் அலுவலகங்கள் இல்லாமையினால் பொது மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு காணப்படும் என்று வெகுஜன ஊடக அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் நேற்று செவ்வாய்க்கிழமை பாராளுமன்றத்தில் முன்வைத்த வாய்மூலமான கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்தப் பிரச்சினை தொடர்பாக வடக்கு மாகாண அரசியல் பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி தீர்வு காணப்படும் எனவும் நாடு முழுவதும் தபால் மற்றும் உப தபாலகங்களை அமைக்கும் நடவடிக்கை தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இருப்பினும் எதிர்வரும் வருடங்களிலும் கட்டட நிர்மாணங்கள் இடம்பெறாத போதிலும் அபிவிருத்தி நடவடிக்கைகள் ஆரம்பமாகும் போதும் இந்த மாகாணத்திற்கு முக்கியத்துவம் வழங்கப்படும் என்றும் அமைச்சர் டலஸ் அழகப்பெரும மேலும் தெரிவித்தார். (நி-5)

# தமிழர்களைக் கொல்ல இடமளித்தவர் முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.

## நினைவுபடுத்தும் தேரர்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினரை மாத்திரம் தேடிச் சென்று அழிப்பதை விட்டு தமிழர்களை கொல்ல, முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தன இடமளித்ததாக தேவா லஹிந்த அஜித தேரர் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக் கையில், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் 13 இராணுவ வீரர்களை கொலை செய்தார்கள்.

ஆனால் இராணுவ வீரர்களை கொலை செய்த அந்த இயக்கத்தினரை மாத்திரம் தேடிச் சென்று அழிப்பதை விட்டு அனைத்து தமிழர்களின் வீடுகளையும், கடைகளையும் உடைத்து அவர்களின் பொருட்களை திருடி, அவர்களுடைய அனைத்து சொத்துக்களுக்கும் தீவைத்துக் கொளுத்தி, தமிழர்களைக் கொல்ல இடமளித்தார்.

இது மிகவும் வேதனையான கொடூரமான சம்பவம். மனித இனத்தில் இடம்பெறக்கூடாத ஒரு கொடூரமான சம்பவம் தான் அன்று நடந்தது.

நமது சிங்கள சமூகத்தில் வாழும், அரசியல் நோக்கங்களுக்காக செயற்படும் சில கொடுமைக்காரர்கள், முக்கியமாக யாழ். நூலக எரிப்பு சம்பவத்தின் பின்னணியில் இருந்த காமினி லொக்குகே உள்ளிட்ட இன்று அரசாங்கத்தில் இருக்கும் பலர் அன்று தமிழர்களுக்கு எதிராக இடம் பெற்ற பல கொடூர சம்பவங்களுக்கு தலைமை வகித்தார்கள் என்பதை நாம் அறிவோம்.

ஆனால் அவர்கள் யாருக்கும் தண்டனை வழங்கவில்லை. இதன் காரணமாகவே அன்று நிறைய தமிழ் மக்கள் இந்த நாட்டில் இந்த சிங்கள சமூகத்தோடு வாழ முடியாது என்ற அச்சத்தில் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் ஆசீர்வாதத்தில் அன்று பல நாடுகளுக்கு புலம்பெயர்ந்து சென்றார்கள்.

ஆகவே இது போன்ற இனக்கலவரங்களை இனியும் ஆரம்பிக்காது மக்கள் அனைவரும் அனைத்து இன, மதங்களையும் மதித்து, இன்று நாட்டில் காணப்படும் பிரதான பிரச்சினைகளை மறைப்பதற்காக உருவாக்கப்படும் ஏனைய பிரச்சினைகளுக்குள் சிக்கி விடாமல் சிந்தித்து செயற்படுமாறு நாம் கேட்டுக் கொள்கின்றோம் என அவர் தெரிவித்தார். (நி-5)

# கட்டணத்தைச் செலுத்தாத அனைவருக்கும் நீர் வெட்டு

(கொழும்பு)

ஆறு மாதங்களுக்கு மேலாக கட்டணத்தை செலுத்தாத 73 ஆயிரம் பேருக்கு நீர்விநியோகத்தை நிறுத்த தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை தீர்மானித்துள்ளது.

குறித்த 73 ஆயிரம் பேரிடம் இருந்து 145 மில்லியன் ரூபாய் செலுத்தப்படாமல் இருப்பதாகவும் நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை அறிவித்துள்ளது.

இவ்வாறு கட்டணம் செலுத்தப்படாமையினால் திணைக்களத்திற்கு 8 பில்லியன் இழப்பு ஏற்பட்டுள்ளதாகவும் அறிவித்துள்ளது. (நி-5)

# தாயிடம் இருந்து சிசுவிற்கு தொற்று ஏற்படும் வீதம் குறைவு

(கொழும்பு)

நாட்டில் இதுவரையில் சுமார் 5 ஆயிரம் கர்ப்பிணிகளுக்கு கொவிட் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இவர்களில் 52 பேர் உயிரிழந்துள்ளனர்.

கொவிட் தொற்று உறுதியான கர்ப்பிணிகளில் பிரசவத்தின் பின்னர் இதுவரையில் 3 சிசுக்களுக்கு மாத்திரமே தாயிடமிருந்து தொற்று ஏற்பட்டுள்ளது என்று சுகாதார அமைச்சின் குடும்பநல மேம்பாட்டு பிரிவின் பணிப்பாளர் விசேட வைத்திய நிபுணர் சித்ரமாலி டி சில்வா தெரிவித்தார்.

தாய்ப்பால் ஊட்டல் மூலம் கொவிட் தொற்றுக்குள்ளான தாயிடமிருந்து குழந்தைக்கு தொற்று ஏற்படாது என்பதை உலக சுகாதார ஸ்தாபனம் மற்றும் யுனிசெப் என்பன உறுதிப்படுத்தியுள்ளதாகவும் வைத்திய நிபுணர் சித்ரமாலி டி சில்வா சுட்டிக்காட்டினார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத்தெரிவித்தார். (நி-5)


# கண்ணீர் அஞ்சலி

அமரர். மாப்பாணி பசுபதி



எமது திணைக்களத்தில் அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமையாற்றும் பசுபதி சுரேஸ்குமார் அவர்களின் அன்புத் தந்தையார் **மாப்பாணி பசுபதி** அவர்களின் மறைவு குறித்து எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஊழியர் நலன்புரிச் சங்கம்,
பதிவாளர் நாயக திணைக்களம்,
வடக்கு வலயம் மற்றும்
காணி மாவட்டப் பதிவகம், யாழ்ப்பாணம்.

(7952)

# அடி பணிந்தது ஆர்.சி.பி கொல்கத்தா அபார வெற்றி

பெங்களூர் அணிக்கு எதிரான போட்டியில் கொல்கத்தா அணி ஒன்பது விக்கெட்டுகள் மற்றும் 10 ஓவர்கள் மீதமுள்ள நிலையில் அபார வெற்றியை பதிவுசெய்துள்ளது.

2021 ஐபிஎல். தொடரின் 31 ஆவது லீக் போட்டி நேற்று முன்தினம் அபுதாபியில் விராட் கோஹ்லி தலைமையிலான ரோயல் செலஞ்சர்ஸ் பெங்களூர் மற்றும் இயன் மோர்கன் தலைமையிலான கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிகளுக்கு இடையில் ஆரம்பமானது.

போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற பெங்களூர் அணி, முதலில் துடுப்பெடுத்தாடுவதற்கு களமிறங்கியது.

கொல்கத்தா அணியினரின் பந்து வீச்சுகளுக்கு தாக்கு பிடிக்க முடியாத பெங்களூர் அணி வீரர்கள் ஒருவர் பின் ஒருவராக ஆட்டமிழந்து செல்ல, 19 ஓவர் முடிவிலேயே சகல விக்கெட்டுகளையும் பறிகொடுத்து 92 ஓட்டங்கள் மாத்திரமே எடுத்தது பெங்களூர்.

பெங்களூர் சார்பில் சொல்லும்படியாக தேவதூத் படிக்கல் மாத்திரம் 22 ஓட்டங்களை பெற்றார்.

பந்து வீச்சில் கொல்கத்தா அணி சார்பில் ரஸல் மற்றும் வருண் சக்கரவர்த்தி ஆகியோர் தலா 3 விக்கெட்டுகளையும், லோக்கி பெர்குசன் 2 விக்கெட்டுகளையும், பிரசித் கிருஷ்ணா ஒரு விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

93 ஓட்டம் என்ற இலகுவான இலக்கை நோக்கி பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கொல்கத்தா அணி ஆரம்பம் முதலே தனது அதிரடியான ஆட்டத்தை வெளிக்காட்டியது.

இதன் விளைவாக 10 ஓவர்கள் நிறைவில் ஒரு விக்கெட்டினை மாத்திரம் இழந்து 94 ஓட்டங்களை பெற்று, வெற்றியிலக்கை கடந்தது.

அணி சார்பில் அதிகபடியாக சுப்மன் கில் 34 பந்துகளில் ஒரு சிக்ஸர், 6 பவுண்டரிகளுடன் 48 ஓட்டங்களில் ஆட்டமிழக்க, வெங்கடேஷ் ஐயர் 27 பந்துகளில் ஒரு சிக்ஸர், 7 பவுண்டரிகள் அடங்கலாக 41 ஓட்டங்களுடனும், வெற்றியின் இறுதித் தருவாயில் களமிறங்கிய ரஸல் எதுவித ஓட்டமின்றியும் ஆட்டமிழக்காதிருந்தனர்.

இந்த வெற்றியின் மூலம் பட்டியலில் ஏழாம் இடத்தில் இருந்த கொல்கத்தா ஆறு புள்ளிகளுடன் 5 ஆம் இடத்துக்கு முன்னேறியது. (4)



## தேசிய கராத்தே அணியின் பயிற்சிகளுக்கு புதிய தலைமையகம்



இலங்கையின் தேசிய கராத்தே அணியினை மேம்படுத்தும் நோக்கில் அவர்களுக்கு தேவையான வசதிகளுடன் கூடிய தலைமை பயிற்சியகம் விளையாட்டுத்துறை அமைச்சினால் விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத்தில் உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் விளையாட்டுத் துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ, பணிப்பாளர் நாயகம் அமல் எதிரிசூரிய , ஸ்ரீலங்கா கராத்தே தோ சம்மேளனத்தின் தலைவர் எச்.எம்.சிசரகுமார, செயலாளர் கீர்த்தி குமார, உப தலைவர் நதித்த சொய்சா, பொருளாளர் கிரேஸ்மன், மேல் மாகாண தலைவர் நீல், இணைப்பாளர் தேஷாதி குரே ,தேசிய தெரிவுக்குழு உறுப்பினர் அன்ரோ டினேஸ், தேசிய அணி பயிற்றுனர் சாமிந்த ஆகியோரும் இதில் கலந்து கொண்டனர்.

இவ்வாறு தேசிய கராத்தே அணியின் பயிற்சிகளுக்கு புதிய தலைமையகம் அமையப்பெற்றமைக்கு ஸ்ரீ லங்கா கராத்தே தோ சம்மேளனம் விளையாட்டுத்துறை அமைச்சிற்கு நன்றிகளை தெரிவித்துள்ளது. (4)

## இன்றைய போட்டி vivo IPL

DELHI CAPITALS VS SUNRISERS HYDERABAD

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2409

**திலீபன்**

உன் சந்தர்ப்பம் வரும்வரை பொறுமையாய் இரு...




உனக்கு சந்தர்ப்பம் தரவில்லையெனில் பொங்கியெழு...

**சுரேகா**

IT கம்பெனியில் வேலை பார்க்கிறேன் என்று சொல்லி தானே என்னை கல்யாணம் பண்ணி...



Iyanar Tea கடையில் வேலை பார்த்திட்டு IT கம்பெனி என்று ஏமாத்துறாய் நீ...

**அஸ்வினி**

34 மார்க் எடுத்த உடனே 1 மார்க் கேட்டு பிச்சை எடுத்தவன் இல்லடா கடைசி பெஞ்ச் மாணவன்



நாம எப்படி 34 மார்க் எடுத்தோம் என்று ஆச்சரியத்தில் பேப்பரை திரும் திரும்பி சந்தோஷமா பார்த்தவன் தான்டா உண்மையான கடைசி பெஞ்ச் மாணவன்

**ஹாசாந்**

நாட்டின் பொருளாதாரம் அடுத்த ஆண்டு மீளும்... மத்திய வங்கி ஆளுநர்




மக்கள்- இனி உருவிறதுக்கு ஒண்டுமில்லத்

**ஜெனி**


காதலித்துப்பார் திங்கட் கிழமை கூட சொர்க்கமாகத் தெரியும்



கல்யாணம் பண்ணிப் பார் ஞாயிற்றுக் கிழமை கூட நரகமாய்த் தெரியும்

**பவி**

தெரியாத உறவுகளை இணைத்து விட்டு தெரிந்த உறவுகளை பிரித்து விடுகிறது இணையம்



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# இராசிபலன்

**22.09.2021**
புரட்டாதி 06 , புதன்கிழமை
பிரதமை காலை 6.26 மணிவரை
உத்தரட்டாதி காலை 6.26 மணிவரை
சுபநேரம் 4.32-06.02 மணிவரை
இராகுகாலம் 12.02-1.32 மணிவரை
சந்திராஷ்டமம்: பூரம்

வளவன்

**மேஷம்** – தொழில் ரீதியான பயணங்கள் இடம்பெறலாம், வழிபாட்டால் அமைதி காண வேண்டிய நாள், கொடுக்கல் வாங்கல்களில் நிதானம் தேவை, சுப விரயங்கள் கூடும் நாள்.

**ரிஷபம்** – பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**மிதுனம்** – தொட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், வருமானம் வரும் வழியைக் கண்டு கொள்வீர்கள், உற்சாகமான நாள், சுப செய்திகள் வந்து சேரலாம்.

**கடகம்** – புகழ் மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர், பயணங்களால் பலனுண்டு.

**சிம்மம்** – சில பிரச்சினைகளைக் கண்டும் காணாமலும் இருப்பது நல்லது. காரிய வெற்றிக்கு கடவுளை வழிபட வேண்டிய நாள், நடப்பதெல்லாம் நன்மைக்கேயென நினைக்கும் நாள்.

**கன்னி** – சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காண்பீர்கள், பொறுமையால் பெருமை சேரும் நாள், பயணத்தால் பலனுண்டு, காரிய அனுகூலமுண்டு, வருமானம் திருப்தி தரும்.

**துலாம்** – செய் தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், போசன சுகமுண்டு.

**விருச்சிகம்** – தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், நண்பர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.

**தனுசு** – தொழில் வளர்ச்சிக்கு குறுக்கீடாக இருந்தவர்கள் மனம் மாறுவர், பெற்றோர் மீதான பாசம் கூடும், திட்டமிட்ட காரியங்கள் எளிதில் கைகூடும்.

**மகரம்** – பிரபலமானவர்களின் சந்திப்பு இடம் பெறலாம், அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும், பாகப்பிரிவினைகள் மாறும், வழிபாடு சிறப்பினைத் தரும்.

**கும்பம்** – எதிர்பார்ப்புக்கள் எளிதில் ஈடேறும் நாள், ஆரோக்கியத்தில் கவனம் தேவை, குடும்பத்தில் சுப நிகழ்வுகள் நடைபெறும் வாய்ப்புண்டு, வாக்கு மேன்மையுண்டு.

**மீனம்** – திடீர் பயணங்களால் திசை திருப்பங்கள் ஏற்படலாம், நீங்கள் எதிர்பார்த்த காரியமொன்றில் தாமதம் ஏற்படலாம், வழிபாட்டுச் சிந்தனைகள் மேலோங்கும் நாள்.

**கடமை பெரிது, அதை விடப் பெரிது கண்ணியம்**

# மூன்றாவது தடுப்பூசியாக பைசர் வழங்கத் தீர்மானம்

**(கொழும்பு)**

**நாட்டு மக்களுக்கான மூன்றாவது தடுப்பூசியை வழங்குவதற்காக தடுப்பூசிகள் முற்பதிவு செய்யப்பட்டுள்ளதாக அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.**

அதற்காக தேவைப்படும் 14 மில்லியன் பைசர் தடுப்பூசிகளை முற்பதிவு செய்துள்ளதாக அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் தலைவர் தெரிவித்துள்ளார்.

அதனடிப்படையில், மூன்றாவது தடுப்பூசியானது எதிர்வரும் ஒக்டோபர் நடுப்பகுதியில் அல்லது நவம்பர் மாத ஆரம்பத்திலிருந்து நாட்டு மக்களுக்கு வழங்கப்படும் என அவர் தெரிவித்தார். (நி-5)

# நிலுவையிலுள்ள மின் கட்டணங்களுக்கு சிறியளவில் வட்டி வசூலிப்பு

## எரிசக்தி அமைச்சர் அறிவிப்பு



(கொழும்பு)

நாட்டில் நிலவும் பொருளாதார மந்தநிலை காரணமாக மின் கட்டணத்தை செலுத்த முடியாத மின் பாவனையாளர்களுக்கு 24 மாத சலுகை காலம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சர் காமினி லொக்குகே நேற்று செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்தார்.

கொவிட் சூழ்நிலையால் அவர்கள் மின் கட்டணத்தை தவணைகளில் செலுத்த வேண்டும். அத்துடன் நிலுவையில் உள்ள மின் கட்டணங்களின் மாதாந்த தவணைக்கு சிறிய வட்டி வசூலிக்கப்படுமெனவும், வரும் நாட்களில் வசூலிக்கப்படும் வட்டி குறித்து நுகர்வோருக்கு தெரிவிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அமைச்சர் கூறினார்.

தற்போதைய சூழ்நிலையால் கடந்த இரண்டு மாதங்களில் இலங்கை மின்சாரசபைக்கு ரூ.44 பில்லியன் செலுத்த வேண்டியிருந்தது என்றும், மின்சார கட்டணத்தை செலுத்தக்கூடிய மக்கள் கூட தங்கள் மின்சார கட்டணத்தை செலுத்தவில்லை என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதியின் கருத்தின் படி, 2030 இற்குள் சூரிய மற்றும் காற்றாலை மின் உற்பத்தியை 70 சதவிகிதம் சுற்றுச்சூழலுக்கு உகந்த வகையில் அதிகரிக்க திட்டமிடப்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (நி-5)

# சிம்பாவே நிலைதான் இலங்கைக்கும் எதிர்க்கட்சி எச்சரிக்கை

(கொழும்பு)

கோட்டாபயவின் ஆட்சியைப் பார்க்கும் போது சிம்பாவே தான் நினைவிற்கு வருகின்றது என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் கபீர் ஹாசிம் சபையில் தெரிவித்துள்ளார்.

சிம்பாபாவேவின் முன்னாள் ஜனாதிபதி முகாபே நாட்டை நாசமாக்கி வீழ்ச்சியின் பாதையில் கொண்டுசென்றதைபோலவே கோட்டாபய ராஜபக்ஷவின் அரசாங்கமும் செயற்படுகிறது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றில் நேற்று உரையாற்றும் போதே அவர் இந்த விடயத்தினை தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து அவர் உரையாற்றுகையில்,

கடந்த 2020ஆம் ஆண்டில் 65 ஆயிரம் கோடி ரூபாவும் இந்த ஆண்டு ஜூலை மாதத்தில் 20,800 கோடி ரூபாய் அச்சிடப்பட்டுள்ளன. அண்மையில் 50,000 கோடி ரூபா அச்சிடப்பட்டுள்ளது.



அரசாங்கத்தினால் இனியும் ஆட்சியைக் கொண்டு செல்ல முடியவில்லை என்றால் மக்கள் கருத்தை கேட்டறிந்த பின்னர், அதன் ஆட்சியை கொண்டுசெல்ல முடிந்த தரப்பிடம் கையளிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சிம்பாபேவை எடுத்துக் கொண்டால் ஒரு அமெரிக்க டொலருக்கு 280 கோடி சிம்பாவே ரூபாய் கொடுக்க வேண்டியிருந்தது. இறுதியாக அமெரிக்க டொலர்களில் கொடுக்கல் வாங்கல்களை முன்னெடுக்க நேர்ந்தது.

முகாபே என்ற ஜனாதிபதி நாட்டின் விவசாயத்துறை மீது கை வைத்தார், இராணுவ மயமாக்கி நாட்டின் உற்பத்தியை முழுமையாக நாசமாக்கினார்.

அடிப்படைவாதத்தை பரப்பி, நாட்டுக்குள் பிரச்சினைகளை உருவாக்கி, வெளிநாடுகளிடம் கடன்களை பெற்று முடியாத கட்டத்தில் நாட்டில் பணம் அச்சடித்தார்.

உணவு தட்டுப்பாடு ஏற்பட்டு உணவுகளை கூட இறக்குமதி செய்தார். இதுவே சிம்பாபேவை வீழ்த்தியது. இந்த நாடும் அதே பாதையில் பயணிக்கிறது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (நி-5)

# வடக்கில் போதியளவு மின்தகனசாலை அமைக்க அனைத்துத்தரப்பும் ஒன்றிணையுங்கள்

## வடக்கு சுகாதார பணிப்பாளர் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தில் கொவிட்-19 நோய்த்தொற்றினால் உயிரிழப்போரின் சடலங்களை வெளி மாகாணங்களுக்கு மின் தகனத்துக்கு அனுப்பிவைக்கப்படுவது தொடர்பில் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் விளக்கமளித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வடமாகாணத்தை பொறுத்தவரை யாழ்ப்பாணம் மாநகர சபையிலும், வவுனியா நகர சபையிலும் என இரண்டு மின்தகன சாலைகள் மட்டுமே காணப்படுகின்றன.

இவற்றில் ஒரு நாளைக்கு ஆகக்கூடியது 11 உடலங்களை மட்டுமே தகனம் செய்ய முடியும். ஆனால் ஓகஸ்ட் மாத நடுப்பகுதியின் பின்னர் இறப்புக்களில் ஏற்பட்ட சடுதியான அதிகரிப்பினால் மின் தகனத்திற்காக உடலங்கள் பல நாட்கள் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

செப்டெம்பர் மாதம் 3 ஆம் திகதி நிலவரப்படி 54 உடலங்கள் மின் தகனத்திற்காக வடமாகாணத்தில் தேங்கியிருந்தன. இந்த உடலங்களை உரிய சுகாதாரப் பாதுகாப்பு நடைமுறையில் பேணுவதற்குரிய குளிரூட்டி வசதிகள் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே இருந்ததால் 54 உடலங்களையும் உரிய முறையில் பேணுவதில் பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்கினோம்.

எனவே மாகாணத்திற்கு வெளியே உள்ள மின் தகன சாலைகளுக்கு உடலங்களை அனுப்பவேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டோம்.

அதன் அடிப்படையில் செப்டெம்பர் மாதம் 5 ஆம் திகதி முதல் நேற்று வரை 95 உடலங்கள் வடமத்திய, கிழக்கு மாகாணங்களில் மின் தகனத்திற்காக அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

இதில் 79 உடலங்கள் வடமத்திய மாகாணத்திற்கும் 16 உடலங்கள் கிழக்கு மாகாணத்திற்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

இலங்கையின் பல மாவட்டங்களில் 3 முதல் 4 வரையான மின்தகன சாலைகள் காணப்படுகின்றன. ஆனால் வடமாகாணம் முழுவதற்கும் இரு மின்தகன சாலைகள் மட்டுமே இருக்கின்றன.

எனவே மேலும் சில மின் தகன சாலைகளை அமைக்க வேண்டியது காலத்தின் கட்டாயமும் எதிர்காலத்தின் தேவையும் ஆகும்.

எனவே காலத்தின் தேவையை உணர்ந்து இயன்றளவு விரைவில் வட மாகாணத்திற்கு தேவையான மின் தகன சாலைகளை அமைக்க சம்மந்தப்பட்ட அனைத்து தரப்பினரும் ஒன்றிணைவோம் என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.(4-7-33)

## இன்று கொவிட் தடுப்பூசிகள் வழங்கப்படும் இடங்கள்

| MOH | கிராம உத்தியோகத்தர் பிரிவு (20 - 29 வரையான) | தடுப்பூசி வழங்கப்படும் இடங்கள் |
|---|---|---|
| சங்கானை | ஜே/ 168, ஜே/ 169, ஜே/ 175 | தொல்புரம் விக்னேஸ்வரா வித்தியாலயம் |
| சாவகச்சேரி | ஜே/ 294, ஜே/ 296,<br>ஜே/301, ஜே/ 307, ஜே/ 308,<br>ஜே/ 322, ஜே/ 325,<br>ஜே/ 339, ஜே/342 | நாவற்குழி மகா வித்தியாலயம்<br>கோல்ட் ஜூபிலி மண்டபம், சாவகச்சேரி<br>PHC கச்சாய்<br>DH வரணி |
| யாழ்ப்பாணம் | ஜே/ 67 - ஜே/ 68,ஜே/ 78,<br>ஜே/ 83,ஜே/ 85,<br>ஜே/ 107, ஜே/ 109 | சென்.ஜோன்ஸ் கல்லூரி<br>வைத்தீஸ்வரா வித்தியாலயம்<br>துர்க்கா மணி மண்டபம், நல்லூர் |
| காரைநகர் | ஜே/ 41, ஜே/ 48 | MOH Office, காரைநகர் |
| கரவெட்டி | கிராம உத்தியோகத்தர் பிரிவு முழுவதும் | MOH Office, கரவெட்டி |
| ஊர்காவற்துறை | ஜே/ 58, ஜே/ 60 | PHC புளியங்கூடல் |
| கோப்பாய் | ஜே/ 260, ஜே/ 269<br>ஜே/ 265,<br>ஜே/ 274, ஜே/ 276,<br>ஜே/ 281, ஜே/ 287 | MOH Office, கோப்பாய்<br>உரும்பிராய் இந்து கல்லூரி<br>புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தா கல்லூரி<br>DH அச்சுவேலி |
| மருதங்கேணி | ஜே/ 419 - ஜே/ 421 | குடத்தனை கரையூர் AMTM பாடசாலை |
| நல்லூர் | ஜே/ 99,ஜே/ 121, ஜே/ 123, ஜே/ 128,<br>ஜே/ 110, ஜே/ 111,<br>ஜே/ 115, ஜே/ 117 | மஞ்சவனபதி கோவில்<br>ஜே/ 110 கிராம சேகவர் அலுவலகம்<br>MOH Office, நல்லூர் |
| பருத்தித்துறை | ஜே/406, ஜே/411 | யா/ வட இந்து மகளிர் கல்லூரி |
| சண்டிலிப்பாய் | ஜே/ 129 - ஜே/ 139<br>கிராம உத்தியோகத்தர் பிரிவு முழுவதும் | DH மானிப்பாய்<br>சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி |
| தெல்லிப்பளை | கிராம உத்தியோகத்தர் பிரிவு முழுவதும் | யூனியன் கல்லூரி, தெல்லிப்பளை |
| உடுவில் | ஜே/ 182, ஜே/ 183, ஜே/185 - ஜே/187<br>ஜே/ 192 - ஜே/ 194<br>ஜே/ 195 - ஜே/ 199 | உடுவில் மகளிர் கல்லூரி<br>தாவடி கிராம உத்தியோகத்தர் அலுவலகம்<br>MOH Office, உடுவில் |
| வேலணை | ஜே/07, ஜே/ 09 | மண்டைதீவு மகா வித்தியாலயம். |

## அரியாலை கொலைச் சம்பவம்

# மனைவி உள்ளிட்ட இருவருக்கு 14 நாள் விளக்கமறியல்

(யாழ்ப்பாணம்)

அரியாலை பூம்புகார் பகுதியில் அண்மையில் இடம்பெற்ற குடும்பத்தலைவர் கொலையுடன் தொடர்புடைய அவரது மனைவி மற்றும் மற்றொருவர் 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

அச்சுவேலி தெற்கைச் சேர்ந்தவரும் பூம்புகாரில் வசித்து வருபவருமான துரைராசா செல்வக்குமார் தேங்காய் திருவளைக் கட்டையால் கடுமையாகத் தாக்கப்பட்டு சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

கொல்லப்பட்டவரின் மனைவியான 28 வயதுடைய பெண் மற்றும் அவருடன் தொடர்பை வைத்திருந்த 28 வயதுடைய ஆண் ஒருவரும் யாழ்ப்பாணம் குற்றப் பிரிவு பொலிஸாரினால் கைது செய்யப்பட்டனர்.

இருவரும் யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றில் நேற்று முன்தினம் முற்படுத்தப்பட்டனர்.

வழக்கை விசாரித்த நீதிவான் இருவரையும் 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.

கொல்லப்பட்டவரின் மனைவியுடன் கள்ளத் தொடர்புடையவரும் கொலையுடன் தொடர்புள்ளமை ஆரம்ப விசாரணையில் கண்டறியப்பட்டது.

அதனை முதலாவது சந்தேக நபரான கொல்லப்பட்டவரின் மனைவியும் தனது வாக்குமூலத்தில் ஏற்றுக்கொண்டிருந்தார். எனினும் பின்னர் தனக்கும் இரண்டாவது சந்தேக நபருக்கும் தொடர்புள்ளமை உண்மை, ஆனால் கொலையை தான் மட்டுமே செய்ததாகத் தெரிவித்தார்.

பின்னர் இரண்டாவது சந்தேக நபர் காலினால் தனது கணவனின் கழுத்தை பிடித்து வைத்திருந்தபோது தான் தேங்காய் திருவளைகட்டையால் தாக்கியதாக ஒத்துக்கொண்டார். (4-7-33)

# வீதி அகலிப்பு, அழகுபடுத்தல் தொடர்பில் கலந்துரையாடல்



(குப்பிழான்)

யாழ்.வைத்தியசாலை வீதி அகலிப்பு மற்றும் அழகுபடுத்தும் நடவடிக்கை தொடர்பில் குறித்த பகுதி வர்த்தகர்களுடன் நேற்று முன்தினம் திங்கட்கிழமை யாழ்.பொது நூலகத்தில் கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது.

குறித்த கலந்துரையாடலைத் தொடர்ந்து வர்த்தகர்களின் கோரிக்கைக்கு அமைவாக நேரடியாக வர்த்தக நிலையங்களுக்குச் சென்று அவர்களின் பிரச்சினைகள், தடைகள் தொடர்பாக யாழ்.மாநகர முதல்வர் விஸ்வலிங்கம் மணிவண்ணனால் ஆராயப்பட்டது. (4-7-18)



யாழ். பல்கலைக்கழக கலைப்பீடத்தின், சட்டத்துறையில் பயில்வதற்காக 2019/2020 கல்வி ஆண்டுக்குத் தெரிவு செய்யப்பட்ட புதுமுக மாணவர்களுக்கான அறிமுக நிகழ்வு நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

(படம்:-சிவசாந்தன்)

# 30 வயதிற்கு மேற்பட்டவர்கள்

## இந்த வாரத்திற்குள் தடுப்பூசி செலுத்த வேண்டும்

### காலக்கெடு விதித்தது அரசாங்கம்

(கொழும்பு)

**30 வயதிற்கு மேற்பட்டவர்கள் இந்த வாரத்திற்குள் தடுப்பூசியைச் செலுத்திக்கொள்ள வேண்டும் என அரசாங்கம் காலக்கெடுவை அறிவித்துள்ளது.**

குறித்த வயதுடையவர்களுக்காக தொடர்ந்தும் தடுப்பூசி நிலையங்களை இயக்க முடியாது என்பதன் காரணமாக காலக்கெடுவை வழங்க வேண்டிய கட்டாயம் அரசாங்கத்திற்கு ஏற்பட்டுள்ளது என இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார்.30 வயதுக்கு மேற்பட்ட பலர் தடுப்பூசி பெற்றிருந்தாலும், ஒருசிலர் பல்வேறு காரணங்களால் தடுப்பூசியை பெற்றுக்கொள்ள மறுப்பு தெரிவிக்கின்றனர்.

குறித்த வயதுடையவர்களுக்காக தொடர்ந்தும் தடுப்பூசி நிலையங்களை நிர்வகிக்க முடியாது என்றும் நாட்டின் இளைஞர்கள் மற்றும் சிறுவர்களுக்கு தடுப்பூசி வழங்கும் செயற்பாட்டை விரைவாக முன்னெடுக்க வேண்டும் என்றும் சன்ன ஜயசுமன தெரிவித்தார்.

30 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கான தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கை கடந்த வாரம் நிறைவடையவிருப்பதை சுட்டிக்காட்டிய அமைச்சர் அதற்காக மேலும் ஒரு வாரம் நீடிக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார். (நி-5)

## றிசாத்தின் விளக்கமறியல் தொடர்ந்தும் நீடிப்பு

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர் றிசாத் பதியுதீன் எதிர்வரும் 5 ஆம் திகதி வரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். இந்த விளக்கமறியல் உத்தரவை நீடித்து கொழும்பு நீதவான் நீதிமன்றம் நேற்று செவ்வாய்க்கிழமை இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

2019 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதி, கொழும்பு சினமன் கிராண்ட் ஹோட்டலில் தாக்குதல் நடத்திய தற்கொலை குண்டுதாரிக்கு நிதியுதவி வழங்கியதாக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டின் அடிப்படையில் றிசாத் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

## கொவிட் நோயாளர்களுக்கு அதிக பணம் செலவிடும் அரசு

(கொழும்பு)

நாட்டில் கொவிட் தொற்றாளர்களுக்கு நாளாந்தம் சிகிச்சையளிப்பதற்காக அரசாங்கம் பாரிய அளவு சுமை ஒன்றைஏற்க நேரிட்டுள்ளதாக மருந்துகள் உற்பத்தி, விநியோகம் மற்றும் ஒழுங்குமுறை இராஜாங்க அமைச்சின் செயலாளர் வைத்தியர் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

அந்த சுமையை குறைத்து கொள்வதற்கு இலங்கையர்கள் உடனடியாக கொவிட் தடுப்பூசிகளை பெற்றுக் கொள்ள நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

கொவிட் தொற்றிற்கு மத்தியில் இலங்கை பாரிய பொருளாதார நெருக்கடிக்குள்ளாகியுள்ளது. சாதாரண கொவிட் தொற்றாளர் ஒருவருக்கு தினசரி 1800 முதல் 2000 ரூபாய் வரையிலான பணம் சிகிச்சைக்காக செலவிடப்படுகின்றது.

தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெறும் நோயாளிஒருவருக்கு தின சரி 75000 முதல் 200000 ரூபாய் வரை செலவிடப்படுவதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

ஒட்சிசன் உதவியுடன் ஒருவர் சிகிச்சை பெற்றால் இந்த தொகை மேலும் அதிகரிக்கின்றது என அவர் தெரிவித்தார். (நி-5)


பணிநயந்து வாழ்த்துகின்றோம்

திருமதி. சுமதி பாஸ்கரன்



(SLTS-I, விசேட பயிற்சி விஞ்ஞானம்)

37 வருட ஆசிரிய சேவையை நிறைவு செய்து 04.01.2017 தொடக்கம் எமது பாடசாலையில் இளைப்பாறி கடமையாற்றி ஓய்வு பெற்ற ஆசிரியை திருமதி சுமதி பாஸ்கரன் அவர்களின் ஓய்வுக்காலம் சிறக்க இறையாசி வேண்டி வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர் நலன்புரிக் கழகம், யா/ நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலை


## வாழ்வை வளமாக்கும் பூஜை - விரத முறைகள்



### விரதங்கள்

### நவக்கிரக தோஷம் நீக்கும் மகாளய அமாவாசை



நமது வீட்டு வாசல் முன்பு நிற்கும் பித்ருக்களுக்கு எள் தர்ப்பணம் செய்து பிண்டம் சமர்ப்பிக்க வேண்டும். பொதுவாக மாதந்தோறும் வரும் அமாவாசையன்று இறந்து போன மூதாதையர்களுக்கு திதி கொடுத்தால் யாரை நினைத்து திதி கொடுக்கிறோமோ அவர் மட்டும் வந்து திதியை பெற்றுக்கொள்வார்.

ஆனால் மகாளயபட்ச காலத்தில் திதிகொடுத்தால்நம்மூதாதையர்கள் அனைவரும் ஒன்றாக வந்து திதியை பெற்றுக்கொள்வதாக ஐதீகம்.

நமது முன்னோர்களும், சிறு வயதில் இறந்தவர்களும், துர்மரணம் அடைந்தவர்களும், நல்ல கதி அடைவார்கள். நம்மை பெற்று வளர்த்து உயர்த்திய பெற்றோர்களுக்கு திதி கொடுப்பது நமது கடமை. அவதார புருஷர்களான ஸ்ரீராமன், கிருஷ்ணர் ஆகியோர் கூட தங்கள் முன்னோர்களுக்கு திதி செய்தார்கள் என புராணம் கூறுகிறது.

(தொடரும்)

## கனடா பொதுத் தேர்தலில் இலங்கைத்தமிழர் வெற்றி



(ஒட்டாவா)

கனடாவில் நடைபெற்ற பொதுத்தேர்தலில் போட்டியிட்ட இலங்கைத்தமிழரான ஹரி ஆனந்தசங்கரி பெரும்பான்மை வாக்குகளால் வெற்றி பெற்றுள்ளார்.

பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தலைமையிலான லிபரல் கட்சியில் போட்டியிட்ட ஹரிஆனந்தசங்கரி 16 ஆயிரத்து 51 வாக்குகள் வித்தியாசத்தில் தன்னை எதிர்த்து போட்டியிட்ட கொன்சர்வேட்டிவ் கட்சி வேட்பாளரை தோற்கடித்து வெற்றி பெற்றுள்ளார். (நி-5)

## வெலிக்கடை சிறைக்கைதிகள் கூரை மீதேறிப் போராட்டம்



(கொழும்பு)

வெலிக்கடை சிறைச்சாலையில் கைதிகள் சிலர் ஆரம்பித்த போராட்டம் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுவதாக சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதற்கமைய, இதுவரை சுமார் 10 கைதிகள் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாக அத்திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

தமது தண்டனையை குறைக்குமாறு கோரி சிறைச்சாலை கூரை மீதேறி கைதிகள் நேற்று முன்தினம் முதல் இவ்வாறு போராட்டத்தில் ஈடுபடுவதாக சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. (நி-5)

## ஆசிய- பசுபிக் பிராந்தியத்தின்

# அமைதிக்குப் பங்கம் ஏற்பட்டால்

# அமெ. கடும் விளைவுகளை சந்திக்கும்

## வடகொரியா எச்சரிக்கை

(சியோல்)

**"அவுஸ்திரேலியாவுக்கு அணு நீர்மூழ்கிக் கப்பல்களை கொடுக்கும் முடிவினால் ஆசிய - பசுபிக் பிராந்தியத்தின் அமைதிக்கு பங்கம் ஏற்பட்டால் அமெரிக்கா கடும் விளைவுகளைச் சந்திக்க நேரிடும்" என வட கொரியா எச்சரித்துள்ளது.**

எதிர்ப்பு இந்தோ - பசுபிக் பிராந்தியத்தில், சீனாவின் அத்துமீறலை தடுக்கும் நோக்கில் அமெரிக்கா, அவுஸ்திரேலியா, பிரிட்டன் ஆகிய நாடுகள் இணைந்து அணு நீர்மூழ்கிக் கப்பல் தயாரிப்பில் ஈடுபட சமீபத்தில் முடிவு செய்தன.

இதற்கான ஒப்பந்தத்தின் கீழ் அமெரிக்கா, அவுஸ்திரேலியாவுக்கு எட்டு அணு நீர்மூழ்கிக் கப்பல்களை வழங்க உள்ளது. இதற்கு வட கொரியா கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளது.

இது குறித்து வட கொரிய அதிகாரி ஒருவர் கூறியதாவது,

இந்த ஒப்பந்தம் மிகப் பயங்கரமானது. ஆசிய - பசுபிக் பிராந்தியத்தின் அமைதியையும், பாதுகாப்பையும் அழிக்கக்கூடியது. இது அணு ஆயுதப் போட்டியை ஊக்குவிக்கும். சர்வதேச அணு ஆயுதப் பரவல் தடைத்திட்டத்திற்கு எதிரான இந்த ஒப்பந்தத்தால் வட கொரியாவின் பாதுகாப்புக்கு மிகச் சிறிய அளவிலான தாக்கம் ஏற்பட்டாலும் சும்மா விடமாட்டோம்.

கடுமையான விளைவுகளைச் சந்திக்க நேரிடும். சர்வதேச பாதுகாப்பு சூழல் மாறிவருவதற்குஏற்ப, நீண்டகால அடிப்படையில் வட கொரியா, இராணுவ வலிமையைத் தொடர்ந்து மேம்படுத்தும் எனத் தெரிவித்தார். (7-4)

## சூடானில் முன்னெடுக்கப்பட்ட சதி முயற்சி தோற்கடிப்பு

(கார்டூம்)

சூடானில் முன்னெடுக்கப்பட்ட ஆட்சிக் கவிழ்ப்பு சதி முயற்சி தோற்கடிக்கப்பட்டுள்ளதாக அந்நாட்டு அரச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

சதி முயற்சியை அடுத்து சூடானிய தலைநகர் கார்டூம் தெருக்களில் இராணுவ தாங்கிகள் நிறுத்தப்பட்டுள்ளதாக ஊடக அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

ஓம்துர்மனில் உள்ள அரசு வானொலியை கட்டுப்படுத்தும் முயற்சியில் நேற்றுக்காலை இந்தச் சதி முயற்சி மேற்கொள்ளப்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

"சதித்திட்டக்காரர்கள் அரசு ஊடக கட்டடத்தை கைப்பற்ற முயற்சித்தார்கள், ஆனால் அவர்களின் முயற்சி தோல்வியடைந்தது" என்று அந்நாட்டு அரசாங்கத்தின் உயர் மட்ட ஆதாரங்கள் AFP செய்திச் சேவையிடம் கூறியுள்ளன. (7-4)

## லா பால்மாவில் எரிமலை வெடிப்பு 5, 500 பேர் வெளியேற்றம்

(மட்ரிட்)

ஸ்பானிய கேனரி தீவுகளில் உள்ள லா பால்மாவில் எரிமலை வெடித்ததில் வீடுகள் அழிக்கப்பட்டு, சுமார் 5,500 குடியிருப்பாளர்கள் வெளியேற்றப்பட்டுள்ளனர். கும்ப்ரே விஜா எரிமலையில் இருந்து வரும் லாவா கடந்த ஞாயிற்றுக்கிழமை வெடித்ததில் இருந்து இதுவரை சுமார் 100 வீடுகள் அழிக்கப்பட்டுள்ளதாக உள்ளூர் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். மேற்கு ஆபிரிக்க நாடான மொராக்கோ அருகே கேனரி தீவு உள்ளது. இந்த தீவு ஸ்பெயின்நாட்டுக்கு சொந்தமானது ஆகும். இங்கு 80 ஆயிரம் மக்கள் வசிக்கிறார்கள். இந்தத் தீவில் 8 எரிமலைகள் உள்ளன. டெனிகுவியா எரிமலை கடைசியாக 1971 இல் வெடித்தது, ஸ்பானிய மண்ணில் நடந்த கடைசி மேற்பரப்பு வெடிப்பு இதுவாகும். அதன் பிறகு 50 ஆண்டுகளுக்கு பிறகு தற்போது எரிமலை வெடித்துள்ளது. (7-4)

## 107 வயதில் சாதனை படைத்த ஜப்பானிய இரட்டை சகோதரிகள்



(டோக்கியோ)

107 வயதான ஜப்பானிய இரட்டையர்கள் உலகின் வயதான இரட்டையர்கள் என்ற சாதனையை படைத்து கின்னஸ் உலக சாதனைப் புத்தகத்தில் இடம் பிடித்துள்ளனர்.

இரு சகோதரிகளும் 107 வயது, 330 நாட்களை கருத்திற்கொண்டு உலகின் வயதான இரட்டையர்கள் என அங்கீகரிக்கப்பட்டுள்ளனர்.

பல ஆண்டுகளாக தங்கள் சொந்த வாழ்க்கையில் பிஸியாக இருந்த சகோதரிகள், 70 வயது வரை அரிதாகவே சந்தித்துள்ளனர்.

தற்போது தனித்தனியாக விடுதிகளில் வசித்து வரும் இவர்களிடம் கின்னஸ் உலக சாதனைக்கான சான்றிதழ் அளிக்கப்பட்டது.

முன்னதாக, பிரபல ஜப்பானிய இரட்டைச்சகோதரிகள் கின் நரிதா மற்றும் ஜின் கேனி ஆகியோர் 107 ஆண்டுகள் மற்றும் 175 நாட்கள் என்ற முந்தைய சாதனையை இவர்கள் முறியடித்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (7-4)

## ரஷ்ய பாராளுமன்ற தேர்தலில் புடினின் கட்சி வெற்றி

(மொஸ்கோ)

ரஷ்யாவில் இடம்பெற்ற பாராளுமன்ற தேர்தலில் ஜனாதிபதி புடினின் கட்சி வெற்றி பெற்றுள்ளது.

ஜனாதிபதி புடினின் பதவிக் காலத்தை நீட்டிப்பதற்கான அரசியலமைப்பு சட்டத்தை மாற்றுவதற்கு, புடின் தலைமையிலான ஆளும் ஐக்கிய ரஷ்ய கட்சிக்கு பாராளுமன்றத்தில் 3 இல் 2 பங்கு பெரும்பான்மை அவசியம்தேவைப்பட்டதால் இந்தத் தேர்தல் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த தேர்தலாக கருதப்பட்டது.



அத்தோடு அந்த நாட்டின் முக்கிய எதிர்க்கட்சி தலைவரான அலெக்சி நவால்னியை கைது செய்து சிறையில் அடைத்தது, அவரது கட்சி உட்பட பல எதிர்க்கட்சிகளை தேர்தலில் போட்டியிடுவதற்கு தடை விதித்தது போன்ற சர்ச்சைகளுக்கு மத்தியில் இந்தத் தேர்தல் நடந்தது.

அத்தோடு மொத்தம் உள்ள 450 இடங்களில் 350-க்கும் அதிகமான இடங்களில் தங்கள் கட்சிவெற்றி பெற்றதாக ஐக்கிய ரஷ்ய கட்சியின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதற்கிடையில் வாக்குப் பதிவில் பல்வேறு முறைகேடுகள் நடைபெற்றதாக எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டியுள்ளன.

ஆனால் தேர்தல் ஆணையம் இந்தக் குற்றச்சாட்டை நிராகரித்துள்ளது. (7-4)

## ஏமனில் வான்வழித் தாக்குதல் கிளர்ச்சியாளர்கள் 30 பேர் பலி

(சனா)

ஏமன் நாட்டில் மரீப் மத்திய மாகாணத்தில் மேற்கு சிர்வா மாவட்டத்தில் சவுதி தலைமையிலான படையினர் வான்வழித் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

ஹவுதி கிளர்ச்சியாளர்களை இலக்காகக் கொண்டு நடத்தப்பட்ட இந்தத் தாக்குதலில் 30 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

இதுபற்றி ஹவுதி கிளர்ச்சியாளர்கள் நடத்தி வரும் அல்-மசீரா தொலைக்காட்சி வெளியிட்டுள்ள செய்தியில், சிர்வாவில் 23 முறை சவுதி தலைமையிலான படையினர் வான்வழித் தாக்குதல் நடத்தியுள்ளனர் எனத் தெரிவித்துள்ளது.

எனினும், வேறு விபரங்கள் எதனையும் வெளியிடவில்லை. (7-4)

## மூன்றாவது முறையாகவும் பிரதமராகிறார் ட்ரூடோ



(ஒட்டாவா)

கனடாவின் 44 ஆவது பொதுத் தேர்தலில் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவின் லிபரல் கட்சி அடுத்த அரசாங்கத்தை உருவாக்கப் போதுமான இடங்களை வென்றுள்ளதாக அந்நாட்டுச் செய்திச் சேவையான சி.பி.சி. தெரிவித்துள்ளது. இந்த வெற்றியின் மூலம் ட்ரூடோ மூன்றாவது முறையாகவும் தொடர்ச்சியாக கனடாவின் பிரதமராக தேர்ந்தெடுக்கப்படுவார்.

தேர்தல் வெற்றிகள் இன்னும் உறுதிப்படுத்தப்படாத நிலையில், அதிகாரிகள் தொடர்ந்தும் வாக்குகளை கணக்கிட்டு வருகின்றனர்.

சி.பி.சி. செய்திச் சேவை நேற்று முன்தினம் திங்கட்கிழமை லிபரல் கட்சி ஆட்சியைப் பிடிக்கும் என்று அறிவித்தது.

எனினும் சிறுபான்மை அரசாங்கம் அமைக்கப்படுமா? அல்லது பெரும்பான்மை அரசாங்கம் அமைக்கப்படுமா? என்பதை தெளிவாகக் கூறவில்லை.

கனேடிய பாராளுமன்ற தேர்தலில் ஒரு கட்சி பெரும்பான்மையை வெல்ல 338 இடங்களில் 170 இடங்களைப் பெற வேண்டும் என்பதும் குறிப்பிடத்தக்கது. (7-4)

# 20 வயதிற்கு மேற்பட்டோருக்கான தடுப்பூசி செலுத்தும் பணி மன்னாரில் ஆரம்பம்




(மன்னார்)
மன்னார் மாவட்டத்தில் 20 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு கொவிட்-19 தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கைகளில் முதல் கட்டமாக மன்னார் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் நேற்றைய தினம் செவ்வாய்க்கிழமை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ரி.வினோதன் தலைமையில் சுகாதார வைத்திய அதிகாரிகள்,பொது சுகாதார பரிசோதகர்கள்,சுகாதார ஊழியர்கள் மற்றும் இராணுவத்தின் உதவியுடன் இடம்பெற்று வருகின்றது.

குறித்த சினோபார்ம் தடுப்பூசியானது 20 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கும், 29 வயதிற்கு மேற்பட்டவர்களில் இதுவரை எவ்வித தடுப்பூசியை பெற்றுக் கொள்ளாதவர்களுக்கும் குறித்த சினோபார்ம் கொவிட்-19 தடுப்பூசியின் முதலாவது தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

மேலும் இன்று புதன் கிழமை காலை 8.30 மணி முதல் 1.30 மணி வரை எழுத்தூர் அன்னை திரேசா அரசினர் தமிழ் கலவன் பாடசாலையிலும், நாளை வியாழக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் மதியம் 1.30 மணி வரை மன்னார் உயிலங்குளம் றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை மற்றும், மன்னார் புனித சவேரியார் பெண்கள் தேசிய பாடசாலையிலும், நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் மதியம் 1.30 மணி வரை மன்னார் கரிசல் றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை மற்றும்,தலைமன்னார் கட்டுக்காரன் குடியிருப்பு றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையிலும், எதிர்வரும் 25 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் மதியம் 1.30 மணி வரை மன்னார் சித்திவிநாயகர் இந்து தேசிய பாடசாலையிலும் 20 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கும், 30 வயதிற்கு மேற்பட்டவர்களில் இது வரை எவ்வித தடுப்பூசியை பெற்றுக் கொள்ளாதவர்களுக்கும் குறித்த சினோபாம் கொவிட்-19 தடுப்பூசியின் முதலாவது தடுப்பூசியினை பெற்றுக் கொள்ள முடியும் என மன்னார் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (7-4-285)

# வவுனியாவில் 35 பேருக்கு கொவிட் தொற்று உறுதி

(நெளுக்குளம்)
வவுனியாவில் கொரோனா தொற்று 35 பேருக்கு உறுதி செய்யப்பட்டுள்ளதாக சுகாதார பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

வவுனியாவில் கொரோனா தொற்றாளர்களுடன் தொடர்புகளை பேணியவர்கள், வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டவர்கள் மற்றும் எழுமாறாக பி.சி.ஆர் மற்றும் அன்டிஜன் பரிசோதனையின் மேற்கொள்ளப்பட்ட முடிவுகள் சில நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை வெளியாகியுள்ளன.

அத்துடன் இருவர் திடீர் சுகவீனம் காரணமாக வவுனியா வைத்தியசாலையின் கொரோனா விடுதியில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் மரணமடைந்தனர். ஏனைய மூவர் சுகவீனம் காரணமாக மரணமடைந்திருந்தனர். அவர்களுக்கு முன்னெடுக்கப்பட்ட பரிசோதனையில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

இந்நிலையில் தொற்றாளர்களை தனிமைப்படுத்தவும், அவர்களுடன் தொடர்புடையவர்களை சுய தனிமைப்படுத்துவதற்கும் மரணித்த 5 பேருடைய உடல்களையும் சுகாதார நடைமுறைகளை பின்பற்றி தகனம் செய்யவும் சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர். (7-4-299)

# வவுனியாவில் கட்டுக்கடங்காமல் செல்லும் மரண தொகை

## சுகாதாரத் தரப்பு

(நெளுக்குளம்)
வவுனியா மாவட்டத்தில் இம் மாதம் 20 ஆம் திகதி வரை 2222 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

வவுனியா மாவட்டத்தில் கொரோனா தொற்று வீதம் நாளாந்தம் அதிகரித்து செல்கின்றது.

மக்களின் அசமந்தமான செயற்பாட்டால் மரண தொகையும் கட்டுக்கடங்காமல் செல்கின்றது. எனினும் மக்கள் இதன் பாரதூரமான தன்மையை உணரவில்லை. இது பாரிய ஆபத்தான நிலைப்பாடாக உள்ளது.

ஆகவே வவுனியா மாவட்டத்தின் நிலை தொடர்பில் மக்கள் சிந்தித்து சுகாதார நடைமுறைகளை இறுகப் பின்பற்றி செயற்பட வேண்டும் என சுகாதார பிரிவினர் மேலும் தெரிவித்துள்ளனர்.

வவுனியா மாவட்டத்தில் கடந்த ஓகஸ்ட் மாதத்தில் மட்டும் 3328 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். (7-4-299)

# கிளிநொச்சியில் இதுவரை 6,256 தொற்றாளர்கள் பதிவு

## மாவட்ட அரச அதிபர் தகவல்

(கண்டாவளை)
கிளிநொச்சி மாவட்டத்தில் இதுவரை ஆறாயிரத்து 256 பேர் கொவிட்-19 தொற்றுக்கு உள்ளாகி இருப்பதுடன் 73 மரணங்களும் பதிவாகி இருப்பதாக மாவட்ட அரச அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்

நேற்றைய தினம் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே மேற்படி தகவலை தெரிவித்துள்ளார். தொடர்ந்து அவர் கருத்துத்தெரிவிக்கையில் கிளிநொச்சி மாவட்டத்தில் 6 ஆயிரத்து 256 பேர் கொவிட் தொற்றுக்கு இலக்காகி இருப்பதாகவும் இதில் தற்போது 537 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர். அத்துடன் மாவட்டத்தில் இதுவரை எழுபத்தி மூன்று மரணங்கள் பதிவாகியுள்ளது.

மேலும் தடுப்பூசி ஏற்றும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. அத்துடன் நேற்று முன்தினம் முதல் ஆரம்பிக்கப்பட்ட 20 வயது தொடக்கம் 29 வயதினருக்கான தடுப்பூசி ஏற்றும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது என்றும் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி பகுதியில் கடந்த வாரம் கொவிட்-19தொற்றினால் உயிரிழந்த ஒருவரின் சடலம் தகனம் செய்வதற்காக வைத்தியசாலையில் இருந்து எடுத்துச் செல்லப்பட்ட சமயம் குறித்த சடலம் அவரது வீட்டுக்கு அஞ்சலிக்காக கொண்டு செல்லப்பட்டமை தொடர்பில் மாவட்டத்தில் பல்வேறு தரப்பினரிடத்திலும் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது

இது தொடர்பில் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக என எழுப்பப்பட்ட கேள்விக்கு அவ்வாறான எந்த முறைப்பாடுகளும் இதுவரை கிடைக்கப் பெறவில்லை உண்மையில் கொவிட்-19 தொற்றுக்காரணமாக மரணித்தவரின் சடலத்தை கொண்டு செல்வது அல்லது கையாளுதல் தொடர்பாக சுகாதார நடைமுறைகளை பேணிக் கொள்வது வைத்தியசாலை மற்றும் சுகாதாரத் திணைக் களம் அதேவேளை அதனை பொலிஸ் திணைக்களத்திடம் கையளிக்கப்படும் என்றும் இது தொடர்பாக எந்தவிதமான முறைப்பாடுகளும் கிடைக்கப் பெறவில்லை எனவே நான் தற்போது கருத்துக்கள் எதனையும் கூற முடியாது. இந்த நோய்த்தொற்று தொடர்பில் சரியான முறையில் கண்டறிந்து பொறுப்பாக நடந்து கொள்ள வேண்டிய அதிகாரிகள் இந்த விடயத்தில் பொறுப்பற்ற விதத்தில் நடந்திருந்தால் அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (7-4-315-316-100)




# தடத்தில் சிக்கிய சிறுத்தை

(முறிகண்டி)
முல்லைத்தீவு கொக்காவில் பகுதியில் தடத்தில் சிக்கிய பெண் சிறுத்தையை வன ஜீவராசிகள் திணைக்களத்தினர் பாதுகாப்பாக மீட்டுள்ளனர்.

5 அடி நீளம் கொண்ட குறித்த பெண் சிறுத்தை புலி வேட்டைக்காக கட்டப்பட்டிருந்த தடத்தில் சிக்கியுள்ளது.

குறித்த சிறுத்தைக்கு சிகிச்சையளிக்கப்பட்டதன் பின்னர் வில்பத்து காட்டில் விடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வனஜீவராசிகள் திணைக்களம் தெரிவிக்கின்றது. (7-4-100)



# புரட்டாதி மாத இராசி பலன்கள்

## 17.09.2021-17.10.2021

ஜோதி: ஸ்ரீ கலாமணி
சிவஸ்ரீ சிங்காரம்

## இடமாற்றங்கள் வெற்றிகரமாக அமையும்



**மற்றவர்களின் மனம் கோணாமல் பேசும் ஆற்றலைப் பெற்ற துலாம் இராசி வாசகர்களே!**




புரட்டாதி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் சுக்கிரன் உங்கள் இராசியிலேயே பலம் பெற்று சஞ்சரிக்கிறார். தனாதிபதி செவ்வாய், விரயாதிபதி புதனுடன் இணைந்திருக்கிறார். எனவே விரயத்திற்கேற்ற தொகை வந்து கொண்டேஇருக்கும். வீடு மாற்றங்களும், இடமாற்றங்களும் வெற்றிகரமாக அமையும். 2 இல் கேது இருப்பதால் ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும்.

### மகர குருவின் சஞ்சாரம்

உங்கள் இராசிக்கு 3, 6 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் குரு பகவான். அவர் மாதத் தொடக்கத்தில் மகர இராசியில்வக்கிர இயக்கத்தில் இருக்கிறார். உங்கள் இராசிநாதன் சுக்கிரனுக்கு, குரு பகவான் பகை கிரகம் என்பதால் வக்கிர இயக்கத்தில் இருக்கும்பொழுது மிகுந்த நன்மைகளைச்செய்யும். அதன் பார்வை 8, 10, 12 ஆகிய இடங்களில் பதிவதால் தொழில் வளம் சிறப்பாக இருக்கும். துணிந்து சில முடிவுகளை எடுத்து மற்ற வர்களை ஆச்சரியத்தில் ஆழ்த்துவீர்கள். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு பதவி உயர்வுடன் கூடிய இடமாற்றங்கள் கிடைக்கும்.

### மகரச் சனியின் வக்கிர நிவர்த்திக்காலம்

மாதத்தொடக்கத்தில் சனிபகவான் சுக ஸ்தானத்தில் அர்த்தாஷ்டமச் சனியாகச் சஞ்சரிக்கிறார். மேலும் வக்கிரம் பெற்றும் இருக்கிறார். புரட்டாதி11 ஆம் திகதிவக்கிர நிவர்த்தியாகிறார். அர்த்தாஷ்டமச் சனி கொஞ்சம் வலுப்பெறுகிறது. ஆரோக்கியத் தொல்லை ஏற்படலாம். உறவினர் பகை உருவாகாமல் பார்த்துக் கொள்ளுங்கள். பஞ்சம ஸ்தானத்திற்கும் அதிபதியாக சனி விளங்குவதால், பிள்ளைகளை உங்கள் மேற்பார்வையில் வைத்துக்கொள்வது நல்லது. அவர்களின் கல்வி நலன் கருதியும், சுப காரியங்களுக்காகவும் ஒரு தொகையைச் செலவிடுவீர்கள். குருவோடு சனி இணைந்திருப்பதால் பெரியளவில் பாதிப்புகள் ஏற்படாது.

### புதனின் வக்கிர நிவர்த்திக்காலம்

மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிக்கு 12 ஆம் இடத்தில் புதன் வக்கிரம் பெற்று சஞ்சரிக்கிறார். விரயாதிபதி வக்கிரம் பெற்று சஞ்சரிப்பது நன்மை தான் என்றாலும், அவர் 9 ஆம் இடத்திற்கு அதிபதியாக விளங்குவதால், தந்தை வழியில் சில பிரச்சினைகள் ஏற்பட்டு அகலும். வாகனப் பழுதுகளால் வாட்டம் ஏற்படும். வெளி நாட்டில் இருந்து அழைப்புகள் வந்தாலும் அதை ஏற்றுக் கொள்ள முடியாத சூழ்நிலை ஏற்படும். புரட்டாதி17 ஆம் திகதி புதன் வக்கிர நிவர்த்தியாவதால் சுபச்செலவுகள் அதிகரிக்கும்.

### விருச்சிக சுக்கிரனின் சஞ்சாரம்

புரட்டாதி 17 ஆம் திகதி, விருச்சிக இராசிக்கு சுக்கிரன் செல்கிறார். இராசிநாதன் தன ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் இந்த நேரத்தில் தனவரவு தாராளமாக வந்து சேரும். இனத்தார் பகை மாறும். எடுத்த காரியத்தில் வெற்றி கிடைக்கும். கொடுக்கல் - வாங்கல்களை ஒழுங்கு செய்வீர்கள். மங்கல நிகழ்ச்சிகள் மனையில் ஒன்றன் பின் ஒன்றாக நடைபெறத் தொடங்கும். அஷ்டமாதிபதியாகவும் சுக்கிரன் விளங்குவதால் இழப்புகளை ஈடுசெய்ய புதிய வாய்ப்புகள் வந்து சேரும்.

இம்மாதம் நவராத்திரி நாயகியை வழிபட்டு நன்மைகளை வரவழைத்துக் கொள்ளுங்கள்.

### பெண்களுக்கான பலன்கள்


ஆரோக்கியத்தில் அதிக கவனம் செலுத்தவேண்டியதிருக்கும். விரயத்திற்கேற்ற வரவு வந்து சேரும். கணவன் - மனைவியிடையே இருந்த மனக்கசப்பு மாறும்.

பிள்ளைகளை உங்கள் மேற்பார்வையில் வைத்துக் கொள்ளுங்கள். வீட்டிற்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களையும், ஆடம்பரப் பொருட்களையும் வாங்கும் வாய்ப்பு உண்டு. பணிபுரியும் பெண்களுக்கு திறமைக்கு ஏற்ற அங்கீகாரம் கிடைப்பது அரிது.

## புதிய ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டு மகிழ்வீர்கள்



**வெற்றிஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு செயற்படும் விருச்சிக இராசி வாசகர்களே!**




புரட்டாதி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் செவ்வாய் லாப ஸ்தானத்தில் லாபாதிபதி புதனோடும், தொழில் ஸ்தானாதிபதி சூரியனோடும் சஞ்சரிக்கிறார். எனவே தொழில் வளம் சிறப்பாக இருக்கும். துணிவும், தன்னம்பிக்கையும் கூடும். புதிய ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டு மகிழ்வீர்கள். ஆதாயம் தரும் தகவல்கள் அதிகம் கிடைக்கும்.

### மகர குருவின் சஞ்சாரம்

உங்கள் இராசிக்கு 2, 5 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் குரு பகவான். அவர் இப்பொழுது சகாய ஸ்தானத்தில் வக்கிரம் பெற்று சஞ்சரிக்கிறார். அவரது பார்வை 7, 9, 11 ஆகிய இடங்களில் பதிகிறது.

எனவே கல்யாண வாய்ப்புகள் கைகூடும். தொழில் முன்னேற்றம் உண்டு. பூர்வீக சொத்துக்களில் வீடு கட்டும் வாய்ப்பு கிடைக்கும். நண்பர்கள் உங்கள் முன்னேற்றத்திற்கு வழிவகுத்துக் கொடுப்பர். பொதுவாழ்வில் இருப்பவர்களுக்கு பொறுப்புகளும், பதவிகளும் கிடைக்கலாம்.

### மகரச் சனியின் வக்கிர நிவர்த்திக்காலம்

உங்கள் இராசிக்கு 3ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் சனி பகவான், வக்கிர இயக்கத்திலும் இருக்கிறார். புரட்டாதி 11 ஆம் திகதி அவர் வக்கிர நிவர்த்தியாகிறார். சகாய ஸ்தானாதிபதி வக்கிர நிவர்த்தியாவதால் தொட்ட காரியங்கள் வெற்றியாகும். துணையாக இருக்கும் நண்பர்கள் தோள் கொடுத்து உதவுவர். உடன் பிறப்புகள் உதவிகரமாக இருப்பர். தடைப்பட்டு வந்த காரியங்கள் துரிதமாக நடைபெறும். 4 ஆம் இடத்திற்கு அதிபதியாகவும் சனி விளங்குவதால் இடம், பூமி சேர்க்கை ஏற்படும். கட்டிய வீட்டைப் பழுது பார்ப்பது அல்லது வீட்டை விரிவு செய்து கட்டுவது போன்றவற்றில் ஆர்வம் காட்டுவீர்கள். தாய் வழி ஆதரவு உண்டு. தனவரவு திருப்தி தரும். பயணங்கள் பலன் தருவதாக இருக்கும். பஞ்சாயத்துக்கள் சாதகமாகும். நினைத்ததை நினைத்த நேரத்தில் செய்து முடிப்பீர்கள். ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

### புதனின்வக்கிர நிவர்த்திக்காலம்

மாதத் தொடக்கத்தில், கன்னி இராசியில் புதன் உச்சம் பெற்று சஞ்சரிக்கிறார். உங்கள் இராசிக்கு 11 ஆம் இடமான லாப ஸ்தானத்தில் உச்சம் பெற்றுள்ள புதன், புரட்டாதி 17ஆம் திகதி வக்கிர நிவர்த்தியாவதால், இக்காலம் ஒரு பொற்காலமாக அமையும். எந்தத் துறையில் ஈடுபட்டாலும் லாபம் கிடைக்கும். மாமன் - மைத்துனர் வழியில் ஒத்துழைப்பு உண்டு. பழைய பாக்கிகள் வசூலாகி பரவசப்படுத்தும்.

### விருச்சிக சுக்கிரனின் சஞ்சாரம்

மாதத் தொடக்கத்தில் விரயாதிபதி சுக்கிரன் விரய ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். அவர் புரட்டாதி 17 ஆம் திகதி உங்கள் இராசிக்கே வரப்போகிறார். சப்தம விரயாதிபதியான சுக்கிரன் இராசியில் சஞ்சரிப்பது யோகம்தான். மனைவி - மக்கள் வழியில் மகிழ்ச்சிக்குரிய தகவல் வரலாம்.

ஆடை, ஆபரணச் சேர்க்கை உண்டு. வெளிநாட்டு பயணத் தடை நீங்கும். இல்லத்தில் சுப காரியங்கள் நடைபெற வழிபிறக்கும். உத்தியோகத்தில் உள்ள வர்களுக்கு சில சலுகைகள் கிடைக்கும். இம்மாதம் நவராத்திரி காலத்தில் சரஸ்வதி, லட்சுமி, பார்வதி ஆகியோரை வழிபடுவது நல்லது.

### பெண்களுக்கான பலன்கள்

இம்மாதம் வாழ்க்கைத் தேவைகள் பூர்த்தியாகும். பொருளாதாரத்தில் நிறைவு ஏற்படும். குடும்பத்தில் சுபகாரியப் பேச்சுக்கள் நல்ல முடிவிற்கு வரும். கணவன் - மனைவிக்குள் அன்பும், பாசமும் அதிகரிக்கும். தெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றுவீர்கள். பிள்ளைகளின் முன்னேற்றம் பெருமைப்படுவதாக இருக்கும். உத்தியோகத்தில் உயரதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும். சுயதொழில் செய்யும் எண்ணம் மேலோங்கும்.

(தொடரும்...)

# பொருட்கள் இறக்குமதி செய்ய முடியாமைக்கு டொலர் பற்றாக்குறையே காரணம் - மத்திய வங்கி ஆளுநர்



(கொழும்பு)

வெளிநாடுகளிலிருந்து அத்தியாவசிய பொருட்களையும் சமையல் எரிவாயுவினையும் இறக்குமதி செய்ய முடியாதமைக்கு டொலர் பற்றாக்குறையே காரணம் என மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் அரசியல் இலாபம் கருதியே அத்தியாவசிய பொருட்களுக்கான இறக்குமதி நிறுத்தப்பட்டுள்ளதாக முன்வைக்கப்படும் விமர்சனங்களை மறுப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து டுவிட்டரில் கருத்து வெளியிட்டுள்ள அவர், பல்வேறு இன்னல்களையும் சவால்களையும் எதிர்கொண்டுள்ள மக்களின் வாழ்வாதாரத்தில் அரசியல் செய்ய வேண்டிய தேவை இலங்கைக்கு இல்லை என்றும் தெரிவித்தார்.

இந்நிலையில் இலங்கை ரூபாயின் பெறுமதி அதிகரிக்கும் பட்சத்தில் உலக சந்தையில் ஏற்பட்டுள்ள எரிவாயு விலை அதிகரிப்பு உள்ளிட்ட அனைத்து பிரச்சினைகளுக்கும் தீர்வு காண முடியும் என்றும் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார்.

மேலும் நாட்டில் காணப்படுகின்ற அனைத்துப் பொருளாதாரப் பிரச்சினைகளுக்கும் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் முதல் அடுத்த 6 மாத காலத்திற்குள் தீர்வுகள் முன்வைக்கப்படும் என்றும் மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் குறிப்பிட்டார். (நி-5)

# மதுபான நிலையங்களின் திறப்பால் 52 பேர் மருத்துவமனையில்

(கொழும்பு)

குடிபோதையில் மிகவும் மோசமான முறையில் செயற்பட்ட பலர் கொழும்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

மதுபான நிலையங்கள் திறக்கப்பட்ட நிலையில் குடிபோதையில் வன்முறை ஏற்படுத்தும் வகையில் செயற்பட்டமையே இதற்கு காரணமாகும். அதற்கமைய 52 பேர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாக வைத்தியசாலையின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, குடிபோதையில் குழப்பம் ஏற்படுத்தி காயமடைந்தவர்களில் 5 பெண்களும் உள்ளடங்குவதாக தெரியவந்துள்ளது.

காயமடைந்தவர்கள் அனைவரும் 17 முதல் 60 வயதிற்குட்பட்டவர்கள் என தெரியவந்துள்ளது.

மதுபான நிலையம் திறக்கப்பட்டதன் பின்னர் அதன் விளைவுகளை உணர முடிந்ததாக வைத்தியசாலை பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார். (நி-5)

# எட்டு அங்குலம் நீளமுள்ள அரிதான வண்ணத்துப்பூச்சி



(கொழும்பு)

பதுளை மாவட்டம் ஹாலிஎல பகுதியில் சுமார் எட்டு அங்குலம் நீளமுள்ள மிக அரிதான வண்ணத்துப்பூச்சி ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

குறித்த பகுதியில் ஒரு தோட்டத்தில் மரத்தடியின் கீழ் குறித்த வண்ணத்துப்பூச்சி மறைந்திருந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள "லூனா" என்று அழைக்கப்படும் இந்த வகை வண்ணத்துப்பூச்சி இலங்கையில் மிகவும் அரிதான வண்ணத்துப் பூச்சிகளில் ஒன்றாகும்.

மேலும் இது ஒரு பெண் என்று சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் தெரிவித்தனர்.(நி-5)

# பாராளுமன்ற உறுப்பினராக ஜயந்தகெட்டகொட சத்தியப்பிரமாணம்



(கொழும்பு)

ஜயந்த கெட்டகொட நேற்று சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன முன்னிலையில் பாராளுமன்ற உறுப்பினராக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார். அஜித் நிவாட் கப்ரால் பதவி விலகியதையடுத்து ஏற்பட்ட ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் வெற்றிடத்துக்காக ஜயந்த கெட்டகொட நியமிக்கப்பட்டுள்ளார்.(நி-5)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## மனதை அழிப்பது எப்படி?

எங்கள் ஆள் ஒருத்தன் ஒரு பெரியவரிடம் போய் பிரம்மத்தை அடைவதற்கு வழி என்னங்க என்று கேட்டான். ஏதோ பெரம்பலூருக்குப் போவதற்கு வழி சொல் என்பது மாதிரிக் கேட்டான்.

அவர் சொன்னார்... மனது அழிந்தால் தான் பிரம்மத்தை அடைய முடியும் என்று. அதை எப்படி அழிக்கிறது? என்றான் இவன்.

மனதைக் கொண்டே மனதை அழிக்க முடியும் என்றார் அவர். இவனுக்கு ஒன்றும் புரியவில்லை.

சரி பின்பு வந்து பார்க்கின்றேன் என்று சொல்லிவிட்டுப் போய் விட்டான். மனதை மனதைக் கொண்டே அழிக்க முடியும் என்கின்றார் பதஞ்சலி மகரிஷி. மனதுக்கு இரண்டு குணங்கள் உண்டு.

ஒன்று பலவிதமான எண்ணங்களில் குழம்பியிருக்கின்ற நிலை. இன்னொன்று எப்போதாவது சில சமயங்களிலே ஒரே எண்ணத்திலே நிலைத்திருக்கின்ற நிலை. அறிவியல் வல்லுநர்கள் ஒரே எண்ணத்திலே ஆழ்ந்து போய் இருப்பார்கள். அதனாலே தான் புதுப்புது உண்மைகளைக் கண்டு பிடிக்க முடியுது. ஒரு குழந்தைக்கு ஆபத்து என்றால் அம்மாவினுடைய நினைப்பு முழுவதும் குழந்தை மேல் இருக்கும். இப்படித் தன்னையறியாமல் சில சமயங்களிலே ஒரே எண்ணத்திலே நிலைத்திருக்கின்ற மனத்தை...நாம் அறிந்தே அது ஒரே எண்ணத்திலே நிற்கும்படியாக பழக்க வேண்டும்.

பதஞ்சலி முனிவர் இதற்கு ஒரு சுலபமான வழியைச் சொல்கின்றார். வேதாந்தத்திலே சந்திர சாகா நியாயம் என்று ஒரு வழி உண்டு. அதாவது சந்திரனை ஒரு மரக்கிளையைக் கொண்டு காட்டுதல்.

ஆகாயத்திலே இருக்கின்ற மூன்றாம் பிறையை ஒருத்தருக்குக் காட்ட வேண்டும் என்று வைத்துக் கொள்ளுங்களேன்.

திடீர் என்று சுட்டிக்காட்ட முடியாது. முதலிலே ஒரு மரத்தைக் காட்ட வேண்டும். பின்பு கிளையைக் காட்ட வேண்டும். இதன் பின்பு இலையைக் காட்ட வேண்டும். அதற்கு நேராக பார் மூன்றாம்பிறை தெரியும் என்று சொல்ல வேண்டும். இதே வழியில் மனதை ஒரு நிலைப்படுத்த வேண்டும்.

இப்பொழுது உதாரணத்திற்கு ஒருத்தர் ஒரு இசை நிகழ்ச்சிக்குப் போகின்றார். முதலில் மனது என்ன நினைக்கின்றது. பாடப்போகின்ற கலைஞரைப் பற்றி நினைக்க ஆரம்பிக்குது. அதற்குப் பின்பு அந்த சங்கீத வித்துவான் மறைந்து விடுகின்றார்.

சங்கீதம் தான் மனதுக்குள்ளே நிற்கின்றது. பின்பு அதுவும் மறைந்து போய் அந்த சங்கீத த்தை அனுபவிக்க நான் என்பது மட்டும் மனதிலே நிற்கின்றது. பழக்கத்தினால் இது மாதிரி நிலையை அடிக்கடி அடைய வேண்டும்.

மனது இருக்கே...அதனுடைய குணம் எப்படித் தெரியுமா? அது அதிக நேரம் வரைக்கும் ஒரே நிலையில் இருக்காது. நாங்கள் பழக்கத்தினால் இந்த நிலைக்குக் கொண்டு வர முடியும். இந்த நிலைக்கு வந்ததும் மனது என்ன ஆகும் தெரியுமா?

ஒன்று..பழைய பல எண்ணங்கள் உள்ள நிலைக்கு வரும். அல்லது அந்த ஒரு எண்ணமும் மறைய அதன் காரணமாக மனது அழிய அது பிரம்மத்தை உணரும். இந்த முயற்சியில் தடங்கல்கள் ஏற்படலாம். அப்பொழுது தியானம் அவசியம் என்கின்றார் மகரிஷி பதஞ்சலி.

இந்தக் காலத்திலே ஒரு ஆசாமி. தன்னுடைய மனதை ஒரு நிலைப்படுத்த வேண்டும் என்று ஆசைப்பட்டான். ஒரு பெரியவரிடம் போய்... ஏதாவது வழி சொல்லுங்கள் என்றான். இன்றைக்கு இரவு வா உனக்கு மூன்றாம் பிறையைக் காட்டி பயிற்சி கொடுக்கின்றேன் என்றார். அதேமாதிரி இரவு அவரிடம் போய் நின்றான். அவர் அவனை பக்கத்தில் நிற்க வைத்துக் கொண்டு பயிற்சி கொடுக்க ஆரம்பித்தார்.

இதோ பார் நான் சொல்வதை தீவிரமாகக் கவனி. அதோ தெரிகின்றது பார் ஒரு பெரிய ஆலமரம். அந்த மரத்தில் வலது பக்கமாக ஒரு பெரிய கிளை போகுது பார். அந்த வலது பக்க கிளையின் நுனி யில் ஒரு இலை தெரிகின்றது பார். அந்த இலைக்கு நேராக பார் வையைச் செலுத்து நிலா தெரியும் என்றார்.

இவன் நல்லா கூர்ந்து கவனித்தான். அதிக நேரம் கவனித்தான். அதன்பின்பு இவரைப் பார்த்து தெரியவில்லையே என்றான்.

அதெப்படி தெரியாமல் போகும். நல்லா கவனித்துப்பார் என்றார்.

எப்படிப் பார்த்தாலும் நிலா தெரியாதுங்க என்றான். ஏன் அப்படிச் சொல்கின்றாய் என்றார். இன்றைக்கு அமாவாசை என்றான் அவன்.




அதில் ஒரு தேவதை, "அதோ... அனிலவ் பறவை ஆபத்தில் சிக்கி விட்டது. நான் சென்று உடனே காப்பாற்றுகிறேன்!" என்றது.

உடனே மற்றொரு தேவதை, "வேண்டாம் அனிலவ்வை நானே சென்று காப்பாற்றுகிறேன். அந்தப் பாக்கியம் எனக்கே கிடைக்க வேண்டும்," என்றது.

அதைக் கேட்ட மற்றொரு தேவதையோ, "உன்னை விடவும் நான் குறைந்தவளில்லை. அனிலவ்வை காப்பாற்றும் பொறுப்பு என்னுடையது.

எனவே, இந்த விடயத்தில் நான் விட்டுக் கொடுக்க மாட்டேன்!" என்று கூறியது.

உடனே மற்றொரு தேவதை, "ம்கூம்... எனக்குக் கிடைத்த பொன்னான வாய்ப்பை உனக்கு எப்படிக் கொடுப்பது? எனக்குக் கிடைத்த வாய்ப்பை நானே பயன்படுத்திக் கொள்கிறேன்.

நானே அனிலவ்வைக் காப்பாற்றப் போகிறேன். எக்காரணம் கொண்டும் உன்னை அனிலவ்வைக் காப்பாற்றும்படி விட்டுக் கொடுக்க மாட்டேன்!" என்று பிடிவாதமாகக் கூறியது.

அந்த நேரத்தில், "கீச்... கீச்..." என்ற குரல் கேட்டது. இரண்டு தேவதைகளும் திடுக்கிட்டு நிமிர்ந்து பார்த்தன. அங்கே தேவதைகளின் அருகே, அனிலவ் பறவை நின்று கொண்டிருந்தது.

## இரண்டு தேவதைகள்



"தேவதைகளே! உங்களுக்குள் சண்டை எதற்கு? நான் உயிர் பிழைத்து விட்டேன். நீங்கள் என்னைக் காப்பாற்றுவீர்கள் என்று நம்பிக் கொண்டிருந்தால், என் உயிரை எப்போதோ இழந்திருப்பேன். நானே முயற்சி செய்து போராடியதால் தான் இப்போது உயிர் பிழைத்து உங்கள் முன்னே நின்று கொண்டிருக்கிறேன்!" என்றது.

அதைக் கேட்ட இரண்டு தேவதைகளும், வெட்கத்தால் தலை குனிந்தனர். "நமக்குள் போட்டியிட்டு தற்பெருமைப்பட்டுக் கொண்டோமே! இந்தப் பறவைக்கு இருக்கிற அறிவு கூட தேவதைகளான நமக்கு இல்லையே!" என்று வருத்தப்பட்டனர்.

"தேவதைகளே! ஏன் கவலைப்படுகிறீர்கள்? இனிமேலாவது உங்கள் பழக்கத்தை மாற்றிக் கொள்ளுங்கள்... மனிதர்கள் ஆபத்தில் சிக்கிக் கொள்ளும் போது, நீங்கள் இப்படி அலட்சியமாக இருந்தால், மிகுந்த ஆபத்தாகிவிடும்!" என்று அறிவுரை கூறியது அனிலவ் பறவை. இரு தேவதைகளும் வெட்கத்தில் தலை குனிந்தனர்.

(முற்றும்)

# மகாபாரதம்

191



பகைவனிடம் சமாதானம் செய்து கொண்ட போதிலும் அவனிடம் நம்பிக்கை கொள்ளக் கூடாது.

அப்பகைவனிடம் நட்புடன் நடந்து கொண்டாலும் வீட்டில் இருக்கும் பாம்பிடம் இருப்பது போல எப்போதும் பயத்துடன் இருக்க வேண்டும்.

செல்வத்தை விரும்புபவன் தாழ்ந்து பணிந்து கண்ணீர் வடித்துக் காரியத்தைச் சாதித்துக் கொள்ள வேண்டும்.

காரியம் ஆகும் வரை பகைவரைத் தோளில் சுமக்க வேண்டும். காரியம் முடிந்த உடன் மட்குடத்தைக் கல்லில் போட்டு உடைப்பது போல அவனை அழித்துத் தொலைக்க வேண்டும்.

ஒரு நொடிப் பொழுதானாலும் கருங்காலி மரத்தின் தீயைப் போல ஒளிவிட்டுப் பிரகாசிக்க வேண்டும்.

உமியில் உள்ள தீயைப் போல நீண்ட காலம் புகைந்து கொண்டிருக்கக் கூடாது.

நன்றிகெட்டவரிடம் பொருள் தொடர்பு கொள்ளக்கூடாது. அவர்கள் காரியம் முடியும் வரை நல்லபடியே நடந்து கொள்வர்.

காரியம் முடிந்த பின் அவமதிப்பர். ஆதலால் அத்தகையவரின் காரியத்தை முழுதும் முடிக்காமல் மிச்சம் உள்ளதாகவே வைத்திருக்க வேண்டும்.

வேந்தன் விடா முயற்சியுடன் பகைவனுடைய வீட்டுக்குச் செல்ல வேண்டும். அவன் உடல் நலக்குறைவாய் இருந்தால் உடல் நலன் குறித்து விசாரிக்க வேண்டும்.

சோம்பேறிகளும் தைரியம் இல்லாதவர்களும் பிறரது பழிச்சொற்களுக்குப் பயப்படுவர்களும் விடா முயற்சியின்றி விட்டுவிட்டு முயல்பவர்களும் பொருளை அடைய முடியாது.

ஆமை தன் உறுப்புகளை மறைத்துக் கொள்வது போல் மன்னன் தன் குறைகளை மறைத்துக் கொள்ள வேண்டும்.

குயில், பன்றி, மேரு மலை, ஒன்றும் இல்லாத வீடு, பாம்பு ஆகியவற்றைப் போல ஒழுக வேண்டும்.

(தொடரும்)

"தெய்வம் நீ என்று உணர்!"
– பாரதி

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## நிதிப்பலமிக்க சைவாலயங்கள் முதலீடு செய்ய முன்வர வேண்டும்

நிதிப் பலமுடைய சைவாலயங்கள் முதலீடு செய்வதற்கு முன்வரவேண்டும் என்ற இத் தலையங்கத்தைப் பார்த்தவுடன் உங்களில் பலர் நெற்றிப் புருவத்தை உயர்த்திக் கொள்வீர்கள் என்பது நமக்குத் தெரியும்.

ஆனாலும் இதற்குள் இருக்கக்கூடிய யதார்த்தத்தை ஒருகணம் சிந்தனை செய்ய வேண்டும் என்பதற்காகவே இத்தலையங்கம் இங்கு எழுதப்படுகிறது.

பொதுவில் எமது முன்னோர்கள் தமக்கு இருக்கக்கூடிய நிலபுலங்களில் ஒருபகுதியை ஆலயத்துக்கு தர்மசாசனமாக எழுதிக் கொடுக்கின்ற வழமையைக் கொண்டிருந்தனர்.

இதனால் சைவாலயங்களுக்கு இருக்கக்கூடிய மேட்டு நிலங்களும் வயல் காணிகளும் ஏராளம்.

இருந்தும் அவற்றை முறையாகப் பராமரிக்காததன் காரணமாக பெருமளவு நிலங்கள் அபகரிப்புக்குட்பட்டுள்ளன என்பதை இங்கு கூறித்தானாக வேண்டும்.

இவையொருபுறமிருக்க, சமகால சூழ்நிலையில் வரலாற்றுச் சிறப்புமிக்க சைவாலயங்களின் பெயர்களில் கணிசமான நிதி வங்கிகளில் வைப்புச் செய்யப்பட்டுள்ளன.

இந்த நிதியானது குறித்த ஆலயத்தில் நடைபெறுகின்ற உற்சவங்களை நிறைவேற்றுவதற்கான வைப்பாக இருக்கின்றதென்பதில் மாற்றுக்கருத்திற்கிடமில்லை.

இந்த வைப்புகள் வங்கி வட்டி வீதம் மிக உயர்ந்ததாக இருந்தபோது நடைமுறைப்படுத்தப்பட்டன.

ஆனால் தற்போதைய நிலையில், இந்த வைப்புகளுக்கான வங்கி வட்டி நான்கு சதவீதத்துக்குள் இருப்பதனால் குறித்த வட்டி வருமானத்தைக் கொண்டு ஆலய உற்சவங்களையோ விசேட பூசை வழிபாடுகளையோ செய்வதென்பது முடியாத காரியம்.

இங்குதான் குறித்த வங்கி வைப்புகளை முதலீடாகக் கொண்டு சைவாலயங்கள் உற்பத்தி முயற்சிகளில் ஈடுபட்டால் என்ன என்ற மாற்றுவழிச் சிந்தனை எழுகிறது.

இதை நாம் கூறும்போது; ஆலயங்கள் உற்பத்தி முயற்சிகளில் ஈடுபடலாமா? என்று யாரேனும் கேட்டால்,

ஆம், மிக விஸ்தீரணமான பசுவளர்ப்புத் திட்டத்தை அமுல்படுத்தி அதனூடு பால், தயிர், நெய்யுடன் தூய திருநீற்று உற்பத்தியையும் ஏக்கர் கணக்கில் தென்னஞ் செய்கை, நெற்செய்கை மற்றும் ஆலய கிரியைகளுக்குத் தேவையான பூஜைத் திரவியங்கள், தெய்வ விக்கிரகங்களுக்கான பட்டாடைகள் என்றவாறு உற்பத்தி முயற்சிகளை ஆலய நிர்வாகங்கள் முன்னெடுக்கும்போது,

அதனால் உள்ளூரில் வேலைவாய்ப்பு ஏற்படுவதுடன் தூய்மையானதும் நம்பகத்தன்மையுடையதுமான உற்பத்திப் பொருட்களை மனத்திருப்தியோடு மக்கள் பெற்றுக் கொள்கின்ற வாய்ப்புகளும் ஏற்றுமதி செய்கின்ற சந்தர்ப்பங்களும் ஏற்படும்.

ஆகையால் இதுபற்றி நிதிப்பலமிக்க சைவாலய நிர்வாகங்கள் சிந்திப்பது நன்மை பயப்பதாகும்.

## அதிகரித்த கோவிட் மரணங்கள்
## வவுனியாவில் ஒரே நாளில் 8 சடலங்கள் மின்தகனம்

(வவுனியா)

வவுனியாவில் கோவிட் தொற்றால் மரணித்தவர்களின் சடலங்கள் அதிரிந்துச் செல்லும் நிலையில் நிலமையை சீர் செய்யும் முகமாக சுகாதாரப் பிரிவினரும் நகர சபையினரும் இணைந்து நேற்று 8 சடலங்களை தகனம் செய்தனர்.

வவுனியா மாவட்டத்தில் கோவிட் பரவல் காரணமாக தொடர்ந்தும் பலர் மரணித்து வரும் நிலையில் கோவிட்டால் மரணமடைந்தவர்களின் சடலங்கள் தேக்கமடைந்துள்ளதாக சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், சடலங்கள் தேக்கமடைவதை தவிர்க்கும் பொருட்டு வவுனியா சுகாதாரப் பிரிவினரும் நகர சபையினரும் இணைந்து நேற்றுக் காலை 7 மணியில் இருந்து இரவு 8 மணி வரை சடலங்களை தகனம் செய்யும் நடவடிக்கையை பூந்தோட்டம் மின் மயானத்தில் முன்னெடுத்தனர். இதன்படி அதிகபட்சமாக 8 சடலங்கள் ஒரே நாளில் தகனம் செய்யப்பட்டன.

(ம-3,250,299)

## நீதவானின் உத்தியோகபூர்வ இல்லத்தில் போதையில் கடமை
### பொலிஸார் இருவர் பணி இடைநிறுத்தம்

(கொழும்பு)

நீதவான் ஒருவரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் குடிபோதையில் பாதுகாப்புக் கடமைகளில் இருந்ததாக கூறி கட்டுகஸ்தோட்டை பொலிஸ் நிலையத்தின் பொலிஸார் இருவர் பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் சார்ஜன் ஒருவரும் கான்ஸ்டபிள் ஒருவருமே இவ்வாறு பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்தது.

கொரோனா தொற்று பரவலிடையே பொலிஸாருக்கு தமது வதிவிடங்களில் இருந்து அப்பகுதியில் உள்ள பொலிஸ் நிலையங்களில் கடமைகளை முன்னெடுக்க சலுகை வழங்கப்பட்டுள்ள நிலையில், அவ்வாறான சலுகையின் கீழ் குறித்த இரு பொலிஸ் உத்தியோகத்தர்களும் கட்டுகஸ்தோட்டை - அலதெணிய பகுதியில் உள்ள நீதவான் ஒருவரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் கடமையில் ஈடுபடுத்தப்பட்டனர்.

இந் நிலையில் நேற்று முன்தினம் இரவு, கட்டுகஸ்தோட்டை பொலிஸார் இரவு நேர கண்காணிப்பில் ஈடுபட்டிருந்த சமயம் குறித்த இருவரும் குடிபோதையில் இருந்தமை தெரியவந்துள்ளது.

இதனையடுத்தே அவ்விருவரும் பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளனர்.(ம-3)

### மன்னார் பெரியகமத்தில்
## சீமெந்து பதுக்கப்பட்ட களஞ்சியசாலைக்கு சீல்

(மன்னார்)

மன்னாரில் சீமெந்து பதுக்கப்பட்ட களஞ்சியசாலைக்கு பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை சீல் வைத்துள்ளது.

மன்னார் நகரப் பகுதி மக்களால் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் மன்னார் அலுவலகத்திற்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டின் அடிப்படையில் மன்னார் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் பொறுப்பதிகாரி ஏ.எம். அர்மிஸ் தலைமையில் நேற்று செவ்வாய்க்கிழமை காலை மேற்கொள்ளப்பட்ட திடீர் சுற்றிவளைப்பில் சீமெந்து பதுக்கல் உட்பட பொருட்களை அதிக விலைக்கு விற்றமை, காலாவதியான பொருட்களை காட்சிப்படுத்தியது, உட்பட பல குற்றச்சாட்டில் ஈடுபட்ட வர்த்தகர்கள் மற்றும் வர்த்தக நிலையங்கள் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது.


கொரோனா நிலையைப் பயன்படுத்தி மன்னார் நகரப் பகுதிகளில் குறிப்பாக சாந்திபுரம், தாராபுரம், தலைமன்னார் பிரதான வீதி பகுதிகளில் அதிக விலைக்கு பொருட்கள் விற்பனையில் ஈடுபட்ட வர்த்தக நிலையங்கள் மற்றும் காலாவதியான பொருட்களை காட்சிப்படுத்தியமை, மற்றும் பொருட்களை பதுக்கியமை உட்பட பல குற்றச்செயல்களில் ஈடுபட்ட வர்த்தகர்கள் மீது நேற்று செவ்வாய்க்கிழமை மன்னார் மாவட்ட பாவனையாளர் அபிவிருத்தி அதிகார சபையினரால் வழக்கு பதிவு செய்யப்பட்டது.

அதே நேரம் மன்னார் தலைமன்னார் பிரதான வீதி பெரியகமம் பகுதியில் வர்த்தக நிலையம் ஒன்றிற்கு அருகாமையில் உரிய அனுமதிப் பத்திரமின்றி சீமெந்து பதுக்கி வைக்கப்பட்ட களஞ்சியசாலைக்கும் பாவனையாளர் அபிவிருத்தி அதிகார சபையினர் சீல் வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3,285)

### மருத்துவக் குறிப்பு

கடலையை ஊறவைத்து நன்றாக அரைத்து வெந்நீரில் கலந்து வலியுள்ள மூட்டுக்களின் மேல் பற்றுப்போட்டுவர மூட்டு வலி குணமாகும்.

## ஸ்ரீ இராமகிருஷ்ணரின் அமுதமொழிகள்



### குருவும் சீடரும்

ஒரு பக்தர்: 'சுவாமி, தீயவர்கள் கெடுதல் செய்ய வந்தாலோ, கெடுதல் செய்தாலோ நாம் சும்மா இருக்க வேண்டுமா?'

ஸ்ரீராமகிருஷ்ணர்: 'உலகில் வாழ நேரும்போது, தீயவர்களிடமிருந்து நம்மைக் காத்துக்கொள்ள சிறிது தமோ குணத்தைக் காட்டுவது அவசியம்தான். ஆனால் அவர்கள் தீமை செய்கிறார்கள் என்பதற்காக நாமும் அவர்களுக்குத் தீமை செய்யக் கூடாது.

'சில சிறுவர்கள் புல்வெளியில் மாடு மேய்த்துக் கொண்டிருந்தார்கள். அங்கே கொடிய விஷப் பாம்பு ஒன்று வசித்து வந்தது. பாம்பிடம் உள்ள பயத்தால் எல்லோரும் மிகவும் எச்சரிக்கையாக இருந்தார்கள். ஒருநாள் பிரம்மச்சாரி ஒருவர் அந்தப் புல்வெளி வழியாகச் சென்றார். மாடு மேய்க்கும் பிள்ளைகள் அவரிடம் ஓடிச் சென்று, சுவாமி, அந்த வழியாகப் போகாதீர்கள். (தொடரும்)

# மாகாண சபைத் தேர்தல்கள்

## 43

கலாநிதி க.தவலிங்கம்,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்



இத் தேர்தலில் பதிவு செய்யப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை (A), அளிக்கப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை (B), நிராகரிக்கப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை(C), செல்லுபடியான வாக்குகளின் எண்ணிக்கை (D) அட்டவணை 41 இல் தரப்பட்டுள்ளது.

அட்டவணை 41
மேல் மாகாணசபை 2014

| | |
|---|---|
| A | 4,024,624 |
| B | 2,669,316 |
| C | 113,285 |
| D | 2,556,031 |

போட்டியிட்ட கட்சிகளில்/குழுக்களில் 7 கட்சிகளுக்கு மட்டுமே ஆசனங்கள் கிடைத்தன. அவ் ஏழு கட்சிகளும் பெற்ற வாக்குகள், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணி (1,363, 675), ஐக்கிய தேசியக் கட்சி (679, 682), ஜனநாயகக் கட்சி (203, 767), மக்கள் விடுதலை முன்னணி (156,208), ஜனநாயக மக்கள் முன்னணி (51,000), ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் (49,515), அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் (15,491). அவை பெற்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை அட்டவணை 42இல் காட்டப்பட்டுள்ளது.

களுடன் ஆகும். 2014 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 29 ஆம் திகதி மாகாண சபைக்கான தேர்தல் நடைபெற்றது. 2014 ஆம் ஆண்டின் மேல் மாகாணசபைத் தேர்தலில் பின்வரும் கட்சிகள் போட்டியிட்டன.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணி (ஐமசுமு), ஐக்கிய தேசியக்கட்சி (ஐதேக), ஜனநாயகக் கட்சி (DP), மக்கள் விடுதலை முன்னணி (JVP), எக்சத் லங்கா பொதுஜன பக்சய, ஸ்ரீலங்காமுஸ்லிம் காங்கிரஸ் (SLMC), எக்சத் லங்கா மஹா சபா, ஸ்ரீலங்கா மஹாஜன பக்சய, புதிய ஜனநாயக முன்னணி, ஐக்கிய சோசலிச கட்சி, தேசப்பற்றுள்ள தேசிய முன்னணி, ஜனசெத பெரமுன, நமது தேசிய முன்னணி, ஸ்ரீலங்கா தொழிலாளர் கட்சி, லிபரல் கட்சி, மௌபிம ஜனதா பக்சய, நவசம சமாஜக் கட்சி, சுயேட்சைக் குழுக்கள் ஆகியன போட்டியிட்டன.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் (SLMC), நமது தேசிய முன்னணி, நவசம சமாஜக் கட்சி 3 ஆகிய கட்சிகள் மாவட்டத்தில் போட்டியிடவில்லை.காலி மாவட்டத்தில் 4 சுயேச்சைக் குழுக்கள் போட்டியிட்டன.

அம்பாந்தோட்டை மாவட்டத்தில் 4 சுயேச்சைக் குழுக்கள் போட்டியிட்டன.

இத் தேர்தலில் பதிவு செய்யப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை (A), அளிக்கப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை (B), நிராகரிக்கப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை(C), செல்லுபடியான வாக்குகளின் எண்ணிக்கை (D) அட்டவணை 43 இல் தரப்பட்டுள்ளது.

அட்டவணை 43
தென் மாகாணசபை 2014

| | |
|---|---|
| A | 1,873,804 |
| B | 1,252,296 |
| C | 47,726 |
| D | 1,204,570 |

போட்டியிட்ட கட்சிகளில்/குழுக்களில் 4 கட்சிகளுக்கு மட்டுமே ஆசனங்கள் கிடைத்தன. அந் நான்கு கட்சிகளும் பெற்ற வாக்குகள், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணி (699, 408), ஐக்கிய தேசியக் கட்சி (310, 431), மக்கள் விடுதலை முன்னணி (109,032), ஜனநாயகக் கட்சி (75,532). அவை பெற்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை அட்டவணை 44 இல் காட்டப்பட்டுள்ளது.

எது. 2017 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க மாகாண சபைத் தேர்தல் (திருத்தச்) சட்டம், 2017ஆம் ஆண்டு வரை இருந்த மாகாண சபைத் தேர்தல் முறையை மாற்றிகலப்புத் தேர்தல் முறையைக் கொண்டு வந்தது.

கலப்புத் தேர்தல் முறை என்பது தொகுதிவாரித் தேர்தல் முறையையும் விகிதாசார பிரதிநிதித்துவ தேர்தல் முறையையும் கலந்த ஒரு முறையாகும்.

1988 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க மாகாண சபைத் தேர்தல்கள் சட்டத்திற்கு மேற் குறித்த திருத்தச் சட்டத்தினால் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட இம்முறையில் ஒவ்வொரு மாகாண சபைக்கும் மாவட்ட ரீதியில் தெரிவு செய்யப்பட வேண்டிய உறுப்பினர்களில் 50 சதவீதமானவர்கள் தொகுதிவாரியாகவும் மிகுதி 50 சதவீதமானவர்கள் விகிதாசார பிரதிநிதித்துவ முறையிலும் செய்யப்படல் வேண்டும்.

மாவட்ட ரீதியில் தொகுதிகளை எல்லை நிர்ணயம் செய்வதற்கு, 1988 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க மாகாண சபைத் தேர்தல்கள் சட்டத்திற்கு மேற்குறித்த திருத்தச் சட்டத்தினால் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட 3 அ (1) ஆம் உட்பிரிவுக்கமைய ஐந்து பேரை உள்ளடக்கிய மாகாண சபைத் தேர்தல் தொகுதி எல்லை நிர்ணயக் குழுவொன்றை ஜனாதிபதி 2017 ஒக்டோபர் மாதம் 04 ஆம் திகதிய 2039/29 இலக்க வர்த்தமானி அறிவித்தலின் படி நியமனம் செய்தார்.

இதன்பின் நடந்தவை பற்றி அடுத்த கட்டுரையில் ஆராய்வோம்.

அட்டவணை 42- மேல்மாகாண சபைத் தேர்தல் 2014

| மாவட்டம் | கட்சிகள் | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ஐமசுமு | ஐதேக | DP | JVP | ஐமமு | SLMC | ACMC | மொத்தம் |
| கொழும்பு | 18 | 12 | 3 | 3 | 2 | 1 | 1 | 40 |
| கம்பஹா | 23 | 10 | 4 | 2 | - | 1 | - | 40 |
| களுத்துறை | 13 | 6 | 2 | 1 | - | - | - | 22 |
| Bonus | 2 | - | - | - | - | - | - | 2 |
| மொத்தம் | 56 | 28 | 9 | 6 | 2 | 2 | 1 | 104 |

தென் மாகாணசபைத் தேர்தல் முடிவுகள் -2014

தென் மாகாணத்தில், காலி மாவட்டத்திற்காக 14 அரசியல் கட்சிகள் மற்றும் 4 சுயேச்சைக் குழுக்களும், மாத்தறை மாவட்டத்திற்காக 14 அரசியல் கட்சிகள் மற்றும் 5 சுயேச்சைக் குழுக்களும், அம்பாந்தோட்டை மாவட்டத்திற்காக 09 அரசியல் கட்சிகள் மற்றும் 49 சுயேச்சைக் குழுக்களும் போட்டியிட்டன.

தெரிவு செய்யப்பட வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கை 55, இரண்டு Bonus உறுப்பினர்

ஸ்ரீலங்கா மஹாஜன பக்சய, ஐக்கிய சோசலிச கட்சி,மௌவ்பிம ஜனதா பக்சய ஆகிய 3 கட்சிகள் மாத்தறை மாவட்டத்தில் போட்டியிடவில்லை. மாத்தறை மாவட்டத்தில் 5 சுயேச்சைக் குழுக்கள் போட்டியிட்டன.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் (SLMC), ஸ்ரீலங்கா மஹாஜன பக்சய, புதிய ஜனநாயக முன்னணி, ஐக்கிய சோசலிச கட்சி, நமது தேசிய முன்னணி,லிபரல் கட்சி, மௌபிம ஜனதா பக்சய, நவசம சமாஜக் கட்சி ஆகிய 8 கட்சிகள் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் போட்டியிடவில்லை.

அட்டவணை 44
தென் மாகாண சபைத் தேர்தல் - 2014

| மாவட்டம் | கட்சிகள் | | | | |
|---|---|---|---|---|---|
| | ஐமசுமு | ஐதேக | JVP | DP | மொத்தம் |
| காலி | 13 | 6 | 1 | 2 | 22 |
| மாத்தறை | 10 | 4 | 2 | 1 | 17 |
| அம்பாந்தோட்டை | 8 | 4 | 2 | - | 14 |
| Bonus | 2 | - | - | - | 2 |
| மொத்தம் | 33 | 14 | 5 | 3 | 55 |

ஐமசுமு- ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணி, ஐதேக- ஐக்கிய தேசியக் கட்சி, JVP-மக்கள் விடுதலை முன்னணி, DP- ஜனநாயகக் கட்சி

(முற்றும்.)

## 1,321...

னாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

இவர்கள் அனைவரும் புதுவருட கோவிட் கொத்தணியுடன் தொடர்புடையவர்கள் என அவர் மேலும் தெரிவித்தார்.

அதன்படி, இந்நாட்டு மொத்த கோவிட் தொற்றாளர்களின் எண்ணிக்கை 507, 330 ஆக அதிகரித்துள்ளதாக அரசாங்கத் தகவல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, கொரோனாத் தொற்றில் இருந்து இதுவரை பூரணமாகக் குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 434, 140 ஆக அதிகரித்துள்ளது. (ம-3)

## 66...

மேலும் 66 பேர் உயிரிழந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் இலங்கையில் இதுவரையில் கொரோனாவால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 12 ஆயிரத்து 284 ஆக அதிகரித்துள்ளது. (ம-3)

## மின்சாரம்...

நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது.

இதில் அதேயிடத்தைச் சேர்ந்த பேரம்பலநாதன் கேசவன் (வயது-27) என்ற குடும்பஸ்தர் இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

பெட்டிக்கடை ஒன்று அமைப்பதற்காக வெல்டிங் வேலையில் ஈடுபட்டிருந்த வேளை மின் தாக்கத்திற்கு உள்ளாகியுள்ளார்.

அவர் உடனடியாக அக்கராயன்குளம் பிரதேச வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்படும்போதே அவர் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவரின் சடலம் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பாக அக்கராயன்குளம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-3.315.316)

## 104 கிலோ...

மறைத்து வைக்கப்பட்டிருந்த ஒரு தொகை கேரள கஞ்சாப் பொதிகளை நேற்று செவ்வாய்க்கிழமை அதிகாலை விசேட அதிரடிப் படையினர் மீட்டுள்ளனர்.

விசேட அதிரடிப் படையினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் நேற்று செவ்வாய்க்கிழமை அதிகாலை இலுப்பைக்கடவை கத்தாளம்பிட்டி பகுதிக்குச் சென்று 4 மூடைகளில் பொதி செய்யப்பட்டு மறைத்து வைக்கப்பட்டிருந்த கேரள கஞ்சாப் பொதிகளை மீட்டுள்ளனர்.

இவ்வாறு மீட்கப்பட்ட கஞ்சாப் பொதி 104 கிலோ 750 கிராம் எடை கொண்டது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சந்தேகநபர்கள் எவரும் கைது செய்யப்படவில்லை. மீட்கப்பட்ட கஞ்சாப் பொதிகள் இலுப்பைக்கடவை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டன. (ம-3.285)

## சுகாதார...

வழங்கப்பட்டுள்ள சுகாதார வழிகாட்டல்களை கல்வியமைச்சு பாடசாலைகளுக்கு வழங்கும் என சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் விசேட மருத்துவ நிபுணர் ஹேமந்த ஹேரத் கூறியுள்ளார்.

பாடசாலை மாணவர்களின் சுகாதார பாதுகாப்பு சம்பந்தமாக பின்பற்ற வேண்டிய பல விடயங்கள் அந்த வழிகாட்டல்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் அவர் கூறியுள்ளார்.

இதனிடையே பாடசாலை மாணவர்களுக்கு ஃபைசர் தடுப்பூசியை வழங்க அரசாங்கம் ஏற்கெனவே தீர்மானித்துள்ளது. (ம-3)

## ஜனாதிபதி...

பதி கோட்டாபய ராஜபக்ஷ இன்று உரையாற்றவுள்ளார்.

கோவிட் - 19 தொற்றைக் கட்டுப்படுத்துவதற்கு நம்பிக்கையுடன் எதிர்த்து செயற்படுவதற்கான சூழலைக் கட்டியெழுப்புதல், நிலையான நிலைமையை மீண்டும் உருவாக்கல், உலகின் தேவைகளுக்கு பதிலளித்தல், மனித உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் ஐக்கிய நாடுகள் அமைப்பை மீளப் புத்துயிர் பெறச் செய்தல் எனும் தொனிப்பொருளில் இம்முறை மாநாடு நடைபெறுகின்றது.

நாளை 23ஆம் திகதி நடைபெறவுள்ள உணவுக் கட்டமைப்பு மாநாடு மற்றும் 24ஆம் திகதி நடைபெறவுள்ள வலு சக்தி தொடர்பான உயர்மட்டக் கலந்துரையாடல் என்பனவற்றில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தனது கருத்துக்களை வெளியிடவுள்ளார்.

வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ், ஜனாதிபதியின் தலைமை ஆலோசகர் லலித் வீரதுங்க, வெளிவிவகார அமைச்சின் செயலாளர் அட்மிரல் பேராசிரியர் ஜயநாத் கொலம்பகே ஆகியோர் இந்த விஜயத்தில் இணைந்து கொண்டுள்ளனர். (ம-3)

## அரச கூட்டுக்குள்...

கெரவலப்பிட்டிய மின் உற்பத்தி நிலையத்தின் பங்குகளை அமெரிக்க நிறுவனத்துக்கு வழங்குவதற்கு நிதி அமைச்சால் எடுக்கப்பட்டுள்ள தீர்மானத்துக்கு பங்காளிக் கட்சிகள் இன்னும் பச்சைக்கொடி காட்டவில்லை.

எனினும், இதற்கான உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுவிட்டது எனத் தகவல் வெளியாகியுள்ளது.

இந்நிலையில் ஆளுங்கூட்டணியில் அங்கம் வகிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, தேசிய சுதந்திர முன்னணி, ஜன நாயக இடதுசாரி முன்னணி, எமது மக்கள் சக்தி, லங்கா சமசமாஜக்கட்சி ஆகியன இலங்கை கம்யூனிஸ் கட்சி அலுவலகத்தில் நேற்று முன்தினம் முக்கியத்துவமிக்க சந்திப்பை நடத்தியிருந்தன.

அமைச்சர்களான விமல் வீரவன்ஸ, வாசுதேவ நாணயக்கார, பாராளுமன்ற உறுப்பினர்களான திஸ்ஸ விதாரண, அத்துரலிய ரத்தன தேரர், இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர உள்ளிட்டவர்கள் சந்திப்பில் பங்கேற்றிருந்தனர்.

இந்தச் சந்திப்பின்போது மின் உற்பத்தி நிலைய விவகாரம் தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டது.

அத்துடன், அமெரிக்கா சென்றுள்ள ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நாடு திரும்பிய பின்னர் அவரைச் சந்தித்து இது சம்பந்தமாகப் பேச்சு நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பிரதமர் மற்றும் இதரக் கட்சிகளின் தலைவர்களைச் சந்தித்து கலந்துரையாடுவதற்கும் இதன்போது முடிவெடுக்கப்பட்டுள்ளது.

கெரவலப்பிட்டிய மின் உற்பத்தி நிலையத்தை அமெரிக்க நிறுவனத்திடம் வழங்குவதற்கு பங்காளிக் கட்சிகள் எதிர்ப்பா? என்பது தொடர்பில் அக்கட்சிகளின் தலைவர்கள் பகிரங்கமாக அறிவிக்கவில்லை.

எமது நடவடிக்கை என்னவென்பதைப் பொறுத்திருந்து பாருங்கள் என்று சந்திப்பில் கலந்துகொண்டவர்கள் குறிப்பிட்டனர். அதுமட்டுமல்ல கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு முனையத்துக்கு நடந்த கதியே இதற்கு நடைபெறும் என அமைச்சர் வாசுதேவ நாணயக்கார குறிப்பிட்டார். (ம-3)

## தமிழ் அரசியல்...

சிறைச்சாலை மற்றும் கைதிகள் புனர்வாழ்வு தொடர்பான இராஜாங்க அமைச்சராகப் பதவிவகித்த லொஹான் ரத்வத்த, தனது பதவி நிலை அதிகாரத்தைப் பயன்படுத்தி கடந்த 12ஆம் திகதி மாலை 6 மணியளவில் நிறை போதைக்குள்ளான நிலையில் அநுராதபுரம் சிறைச்சாலைக்குச் சென்று பயங்கரவாதத் தடைச் சட்டத்தின்கீழ் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை தனக்கு முன் கொண்டுவந்து நிறுத்துமாறு பணித்திருந்தார்.

அதற்கமைய அவருக்குமுன் முழந்தாளிட்டு நிறுத்தப்பட்ட தமிழ் அரசியல் கைதிகளது தலையில் அவர் துப்பாக்கியை வைத்து கொலை மிரட்டல் விடுத்திருந்தார்.

மேற்படி சம்பவம் தொடர்பில் பொது முக்கியத்துவம் வாய்ந்த அவசர பிரச்சினை குறித்து பாராளுமன்ற நிலையியல் கட்டளைச் சட்டம் 27 (2) இன் கீழ் முன்வைக்கப்படவுள்ள பிரேரணை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தால் சபாநாயகரிடம் நேற்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

குறித்த பிரேரணை இன்று சபையில் முன்வைக்கப்படும் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப்பிரிவு மேலும் குறிப்பிட்டுள்ளது. (ம-3)

## சிறைச்சாலைக்...

தில் உரையாற்றியபோது இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த 26ஆம் திகதி 12 தமிழ் அரசியல் கைதிகள், பயங்கரவாதத் தடுப்பு பிரிவினரால் அழைத்து செல்லப்பட்டு அளுத்கடை பதில் நீதவான் முன் முற்படுத்தப்பட்டனர்.

அவர்கள் 26ஆம் திகதி தொடக்கம் 29ஆம் திகதிவரை கொழும்பு விளக்கமறியல் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

29ஆம் திகதி அந்த 12 பேரும் நிர்வாணமாக்கப்பட்டு சோதனைக்குள்ளாக்கப்பட்டுள்ளனர். அவர்கள் 540 நாட்கள் பயங்கரவாத தடுப்பு பிரிவினரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

அவர்களிடம் ஒரு ஏஎஸ்பியே வாக்குமூலம் பெற வேண்டும். ஆனால், அப்படி பெறாமலேயே, ஏஎஸ்பிதான் வாக்குமூலம் பெற்றதாக நீதிமன்றத்தில் ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இப்படி 540 நாட்கள் கொடுமையான சித்திரவதைக்கு பின்னர் கொழும்பு விளக்கமறியல் சிறைச்சாலைக்கு கொண்டு வரப்பட்டவர்கள், 3 நாட்களின் பின் மகசீன் சிறைக்கு மாற்றப்படுவதற்கு முன் அனைவரும் நிர்வாணமாக்கப்பட்டுள்ளனர். அவர்களின் ஆண்குறி, மல வாசல் மிகக் கேவலமான முறையில் சோதிக்கப்பட்டுள்ளது.

இது ஒரு பாலியல் சித்திரவதை. 540 நாள் பயங்கரவாத தடுப்பு பிரிவில் இருந்தவர்கள், விளக்கமறியல் சிறைச்சாலையில் இருந்து விட்டு, மகசீனுக்கு மாறும்போது போதைப்பொருள் இருக்கிறதென விசாரிக்கிறீர்கள் என்றால், அவர்களிடம் எப்படி போதைப்பொருள் சென்றிருக்க முடியும்?

அப்படியென்றால் சிறை அதிகாரிகள் தான் அதைக் கொடுத்திருக்க முடியும். அப்படியென்றால் நீங்கள் தினமும் அந்த சிறைச்சாலை அதிகாரியையும் உத்தியோகத்தர்களையும் வீதியில் வைத்து நிர்வாணமாக்கி சோதனை செய்ய வேண்டும். இந்த விடயம் பற்றி முறையான விசாரணை நடத்த வேண்டும் என்றார். (ம-3)

## கிளிநொச்சியில்...

யாழ்.போதனா வைத்தியசாலையில் நேற்று முன்னெடுக்கப்பட்ட பிசிஆர் பரிசோதனையில் குறித்த நபர்களுக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

27, 37, 74 வயதுடையவர்களே இவ்வாறு உயிரிழந்தவர்களாவர். (ம-3)

## கரவெட்டியில்...

ளார்.

கரவெட்டி கிழக்கு கரவெட்டி பகுதியைச் சேர்ந்த 70 வயதுடைய மூதாட்டியே உயிரிழந்துள்ளார்.

கொரோனாத் தொற்றுக்கு இலக்காகிய நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்துள்ளார். இருப்பினும் நேற்று சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். (ம-3.60)

## காணாமலாக்கப்...

இது தொடர்பில் அவர்கள் வெளியிட்ட ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வடக்கு, கிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்களாகிய நாம் இன்று (நேற்று) 1675ஆவது நாளாக எமக்கு நீதிகோரிய தொடர் கவனயீர்ப்புப் போராட்டத்தில் உள்ளோம்.

நூற்றுக்கு மேற்பட்ட, எம்முடன் இந்தப் போராட்டத்தில் இணைந்திருந்த சகோதர சகோதரிகளை இழந்துவிட்ட நிலையிலும், எமக்கு நீதி கிடைக்கும் வரை போராடுவோம் என்ற முனைப்புடன் உள்ளோம்.

இந்த நிலையில் ஐ.நா பொதுச்சபைக் கூட்டத்தில் கலந்துகொள்ளச் சென்ற இலங்கை ஜனாதிபதி அங்கு ஐ.நா. பொதுச் செயலர் அன்ரனியோ அவர்களுடன் கடந்த ஞாயிற்றுக்கிழமை (19.09.2021) விசேட சந்திப்பில் ஈடுபட்டிருந்தார்.

அவர் அங்கு இலங்கையில் காணாமலாக்கப்பட்டவர்களுக்கு மரணச் சான்றிதழ்களும் நட்டஈடும் கொடுப்பது பற்றி கூறியிருந்தார்.

அத்துடன் உள்ளகப் பிரச்சனைகள் உள்ளகப் பொறிமுறையினூடாகத் தீர்க்கப்பட வேண்டும் என்றும் தெரிவித்ததாக ஊடகங்களில் வெளியான செய்திகளைப் பார்த்து அதிர்ச்சியும் ஆழ்ந்த கவலையும் அடைந்தோம்.

எமது உறவுகள் காணாமல் ஆக்கப்பட்ட விடயத்தில் நேரடியாகச் சர்வதேசத்தினாலேயே குற்றம் சாட்டப்பட்ட, சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் பாரப்படுத்தும்படி ஐ.நா மனித உரிமை ஆணையாளரால் பரிந்துரைக்கப்பட்ட இலங்கையின் ஜனாதிபதியை, அதே ஐ.நா மன்றில் சர்வதேச சமூகம் இன்று வரவேற்று கைலாகு கொடுப்பதை நாம் கவலையுடனேயே உற்றுநோக்குகின்றோம். வேறு வழியின்றி எமது கடைசி நம்பிக்கையாக சர்வதேச நீதி பொறிமுறையே இருப்பதால், இந்த இராஜதந்திர சம்பிரதாயங்களையும் தாண்டி சர்வதேசம் பாதிக்கப்பட்ட எமக்கு நீதியை பெற்றுத்தரும் என்று நம்புகின்றோம்.

இவ்விடயத்தில் ஐ.நாவின் செயலாளர் உட்பட்ட சர்வதேச பிரதிநிதிகள் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் நிலை மற்றும் நீதி பொறிமுறை தொடர்பாக கேள்வி எழுப்பாமை பாதிக்கப்பட்ட எமக்கு மிகுந்த கவலை அளிக்கின்றது என்றுள்ளது. (ம-3.100.315.316)

# கர்ப்பவதி தாய்மார்கள் தடுப்பூசியை ஏற்றிக்கொள்ளுங்கள்

## விசேட வைத்தியர் சித்திரமாலி டி சில்வா

(கொழும்பு)

இதுவரை தடுப்பூசியை ஏற்றிக்கொள்ளாத கர்ப்பவதித் தாய்மார் தமது பிரதேச குடும்ப சுகாதார சேவை அதிகாரிகள் அல்லது சுகாதார வைத்திய அலுவலகங்களுடன் தொடர்பு கொண்டு தடுப்பூசியை பெற்றுக் கொள்ளுமாறு குடும்ப சுகாதார பணியகத்தின் பணிப்பாளர் விசேட வைத்தியர் சித்திரமாலி டி சில்வா தெரிவித்துள்ளார்.

தெற்காசிய நாடுகளில் கர்ப்பவதித் தாய்மார்களுக்கு தடுப்பூசி ஏற்றிய முதலாவது நாடாக இலங்கை மாறி இருப்பதாகவும் சித்திரமாலி டி சில்வா குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற "இலங்கையில் தடுப்பூசி ஏற்றலின் தற்போதைய நிலை" தொடர்பாக ஊடகங்களுக்கு தெளிவுபடுத்தும் நிகழ்வில் அவர் இதுதொடர்பாக மேலும் தெரிவிக்கையில்,

கர்ப்பவதி தாய்மார்களுக்கு விசேட முறையின் கீழ் தடுப்பூசி ஏற்றப்படுகின்றது.

தடுபபூசி ஏற்றும் வேலைத் திட்டத்தின்கீழ் 13 மில்லியனுக்கும் மேற்பட்ட மக்களுக்கு முதலாவது தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளது.

இது மொத்த சனத் தொகையில் 63% ஆகும். 2 தடுப்பூசிகளையும் பெற்றுக் கொண்டவர்களின் எண்ணிக்கை 50 சதவீதத்தையும் தாண்டி உள்ளது என்று கூறினார். (ம-3)

# வீடு புகுந்து கொள்ளையிட முயற்சித்தவர் மடக்கி பிடிப்பு

## யாழ்.சுழிபுரத்தில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.வட்டுக்கோட்டை - சுழிபுரம் பகுதியில் திருடன் ஒருவன் நேற்று முன்தினம் தினம் பொதுமக்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, தொல்புரம் மேற்கு சுழிபுரம் பத்தானைகேணிஞான வைரவர் ஆலயத்திற்கு அருகில் உள்ள வீடொன்றில் வீட்டிலுள்ளவர்கள் வேலைக்கு சென்ற சமயம் பார்த்து வீட்டின் கதவை உடைக்க திருடன் முற்பட்டுள்ளான்.

கதவு உடைக்கப்படும் சத்தத்தை அறிந்த அயல் வீட்டார் உடனடியாக குறித்த வீட்டிற்கு சென்ற நிலையில் திருடன் ஓட ஆரம்பித்தான். அயலவர்களின் உதவியுடன் திருடனை பிடித்து வட்டுக்கோட்டை பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

பொலிஸார் திருடனின் வீட்டை சோதனை செய்தபோது ஒரு தொகை நகை அடகு சிட்டைகள் மீட்கப்பட்டதாக தெரிவிக்கப்படும் நிலையில் சம்பவம் தொடர்பில் வட்டுக்கோட்டைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-3)

# கைதிகளை அச்சுறுத்திய லொஹான் கைது செய்யப்படாதது ஏன்?

## சபையில் சிறீதரன் எம்.பி கேள்வி

(கொழும்பு)

மதுபோதையில் கைத் துப்பாக்கியுடன் அநுராதபுரம் சிறைச்சாலைக்கு சென்று தமிழ் அரசியல் கைதிகளுக்கு கொலை அச்சுறுத்தல் விடுத்த சிறைச்சாலைகள் முகாமைத்துவம் மற்றும் சிறைக் கைதிகள் புனர்வாழ்வளிப்பு அலுவல்கள் இராஜாங்க அமைச்சராக இருந்த லொஹான் ரத்வத்த இதுவரையில் கைது செய்யப்படாதது ஏன்?

மனநோயால் பாதிக்கப்பட்ட நிலையில்தான் லொஹான் ரத்வத்த அந்த சிறைக்கு சென்றாரா? எனத் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன் சபையில் கேள்வி எழுப்பியதுடன், இலங்கையில் இதுவரையில் இடம்பெற்ற சிறைச்சாலை படுகொலைகளுக்கு நீதி வழங்கப்பட்டதாக வரலாறு இல்லையெனவும் தமிழ் அரசியல் கைதிகளே இவ்வாறு இலக்கு வைத்து படுகொலை செய்யப்பட்டுள்ளனர் எனவும் அவர் சபையில் சுட்டிக்காட்டினார்.



மதுவரிக் கட்டளைச் சட்டத்தின்கீழ் அறிவித்தல், துறைமுகங்கள் மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டுச் சட்டத்தின்கீழ் 05 கட்டளைகள், விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழான 06 கட்டளைகள், வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழான 03 ஒழுங்கு விதிகள், வெளிநாட்டு செலாவணிச் சட்டத்தின் கீழான கட்டளை மற்றும் இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழான ஒழுங்கு விதிகள் மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறினார். (ம-3)

# இலங்கை விவகாரங்களில் ஐ.நா தலையிடமுடியாது

## ஆளும்கட்சி எம்.பி திஸாநாயக்க

(கொழும்பு)

இறுதிக்கட்ட யுத்தத்தில் ஏற்பட்ட பேரழிவிற்கு விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரனும் அவரது குடும்பத்தாருமே பொறுப்புக் கூற வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் நேற்றைய தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில்கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட டார்.

அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில்,

ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் 76 ஆவது கூட்டத் தொடர் இலங்கைக்கு சாதகமாக அமையும். இலங்கையின் உள்ளக விவகாரத்தில் தலையிடும் அதிகாரம் ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவைக்கும் மனித உரிமை ஆணையாளருக்கும் கிடையாது.

காணாமல்போனார் விவகாரமும் தமிழர் பிரச்சினையையும் தமிழ் தேசியக் கூட்டமைப்பும் புலம்பெயர் தமிழர் அமைப்புக்களும் தங்களின் சுய தேவைக்காக பயன்படுத்திக்கொள்கிறார்கள்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாண தமிழ் மக்கள் மத்தியில் தமிழ் அரசியல் கட்சிகள் தொடர்பில் நல்ல நிலைப்பாடு ஏதும் கிடையாது. இறுதிக்கட்ட யுத்தத்தில் காணாமல்போனோருக்கு நேர்ந்ததை அவர்களின் உறவினர்கள் நன்கு அறிவார்கள்.

இருப்பினும் தற்போது காணாமலாக்கப்பட்டோரை தேடித் தருமாறு போராட்டத்தில் ஈடுபடுகிறார்கள். இறுதிக்கட்ட யுத்தத்தில் ஏற்பட்ட பேரழிவிற்கு விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரனும் அவரது குடும்பத்தாருமே பொறுப்புக்கூற வேண்டும்.

இராணுவத்தில் சரணடைவதற்கான ஆயுதங்களை எறிந்த போராளிகளையும் இராணுவத்தினர்வசம் நோக்கி சென்ற தமிழர்களையும் புலிகள் அமைப்பின் பிரதான தரப்பினரே கொன்றனர்.

இந்த மனித உரிமை மீறல் குறித்து மனித உரிமை பேரவை ஆராயவில்லை. நாட்டில் காணப்படும் உள்ளக பிரச்சினைக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முரண்பாடற்ற தீர்வை வழங்குவார். எடுக்கப்படும் தீர்மானங்கள் நாட்டின் சுயாதீனத்தன்மைக்கும் பொதுச் சட்டத்திற்கும் உட்பட்டதாக இருக்கும் என குறிப்பிட்டுள்ளார். (ம-3)


## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்

முத்தம்மா குணமாலை



தோற்றம் 13.08.1942

மறைவு 15.10.2019

திதி 22.09.2021

இருக்கும் போது உன்
அருமை தெரியவில்லை
இழந்தபோது புரிந்தது
உன் ஈரமனம்
என்றும் விழிகளில்
நீ நினைவாக
எம்முடனே நிலைத்திருப்பாய்!

(7950)

8 ஆம் வட்டாரம்,
மடத்துவெளி,
புங்குடுதீவு.

குடும்பத்தினர்

## காணி விற்பனைக்கு

தெல்லிப்பளை வடக்கு, வீமன்காமம் (டச்சு றோட்) பகுதியில் 8 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
(நிலபர 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 14 அடிப் பாதையுடன்)

பார்வையிடும் நேரம் : காலை 6.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணிவரை.
(தரகர் தேவையில்லை)

(7953)

077 814 7389
077 614 7333

## காணி விற்பனைக்கு

நீர்வேலி தெற்கு, கரந்தன் பகுதியில் 2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
(நில.பர 14 அடிப் பாதையுடன் கரந்தன் சந்தியில் இருந்து 200 மீற்றர் தூரம்)

பார்வையிடும் நேரம் : காலை 6.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணிவரை.
(தரகர் தேவையில்லை)

(7954)

077 814 7389
077 614 7333

## பராமரிப்பாளர் தேவை

ஓட்டுமடத்தில் தனியாக வசிக்கும் வயோதிபப் பெண்ணொருவரை வீட்டில் தங்கியிருந்து பராமரிக்கூடிய 3,4 பேரைக் கொண்ட சிறிய குடும்பம் தேவை.

(7947)

021 221 2239
076 928 7229

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் மானிப்பாய் வீதி, ஆறுகால்மடம் இரண்டாம் ஒழுங்கையில் 12 அடி பாதையுடன் 24 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
இரண்டு (02) பரப்பாக பிரித்துக் கொடுக்கப்படும்.
(யாழ். பஸ் நிலையத்தில் இருந்து 2 Km தூரம்)
தொடர்புகொள்ளும் நேரம் காலை 9.00 – மாலை 6.00 மணிவரை
ஒரு பரப்பின் விலை ஆறு இலட்சம்.
சகல ஆவணங்களுடன் விற்பனைக்கு.
[ தரகர் தேவையில்லை ]

(7956)

076 221 2037, 077 288 0152
077 064 2661, 076 734 1023


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 22.09.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.